# டுவிங்கிள்.... டுவிங்கிள்... லிட்டில் ஸ்டார்!

-பெ. நாயகி

பூங்காற்று
புதிரானது



## 1

கண்ணாடியில் தெரிந்த தன்னுடைய பிம்பம் தன் அக்காவோ என்று ரத்னாவுக்கு சந்தேகம் ஏற்பட்டது. நேற்று இருந்ததை விட இன்று இரண்டு மூன்று வயது கூடியிருந்தது போல் தோன்றியது. எல்லாம் அம்மாவின் கைத்திறமை. அதிகப்படியான மேக்கப் ஏற்கெனவே வெளுத்து இருப்பவளைப் போல் காட்டியது. சின்ன இதழ்கள் லிப்ஸ்டிக் உதவியில் மின்னின. நேற்று இரவு அம்மா பிடிவாதமாக கிளிப் மாட்டி விட்டிருந்ததால் கீழ் உதடு லேசாக வீங்கி சதைப்பற்று மிகுந்து காணப்பட்டது. உள்ளுக்குள் வலித்தது.

சுடிதார் போட்டுக் கொள்ள விருப்பம் தெரிவித்த போது அம்மா பிடிவாதமாக மறுத்துவிட்டாள். பட்டுப் பாவாடையும் கொஞ்சம் லூஸான பிளவுஸும் போதும் என்று சொல்லிவிட்டாள். மார்பில் சின்ன ஸ்பான்ஜ் பேட் ஒன்று கட்டி இறுக்கியிருந்ததில் மூச்சுவிட கொஞ்சம் சிரமம் இருந்தது. இப்போது லூஸான ப்ளவுஸ் கொஞ்சம் இறுகி உடம்பைக் கவ்விப் பிடித்திருந்தது.

இப்போது என்னைப் பார்த்தால் யாராவது ஏழாம் வகுப்பு படிக்கும் பெண் என்று நம்புவார்களா என்று நினைக்க சிரிப்பு வந்தது.

"ரத்னா! ரெடியா?" என்று கேட்டபடி உள்ளே வந்த அம்மா ஒரு கணம் நிறைவாகப் பார்த்தாள். "சிலையா இருக்கறடி! என் கண்ணே பட்டுரும் போல" என்றாள் வாயெல்லாம் பல்லாக. "வா! அவங்கள்லாம் வந்துட்டாங்க. சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கில்லியா?" என்று ரத்னாவின் கைகளைப் பிடித்துத் தூக்கி பிளவுஸை அட்ஜஸ்ட் செய்து விட்டாள்.

வெளியே வந்த போது ஹாலில் ஏற்பாடுகள் தயாராக இருந்தன. "சின்னப் பொண்ணு. பார்த்துப் பண்ணுங்க. இதை வைத்து நாலு படம் தேடி வரணும்" என்று அப்பா பல்லிளிப்பாகச் சொல்லிக் கொண்டிருக்க, கேமராமேன் கவனமே இன்றி ரத்னாவை வெறித்துக் கொண்டிருந்தான்.

லைட்ஸ் ஆன்.

விளக்குகள் பளீரென்று மின்னி வெளிச்சத்தை வாரி இறைக்க மற்றவர்களுக்குத்தான் கண் கூசியது. ரத்னா இதெல்லாம் எனக்குப் பலவருட அனுபவம் என்று அலட்சியமாக உட்கார்ந்திருந்தாள்.

பேட்டி எடுக்கத் தயாராக இருந்த சுந்தரி, அம்மா வேடத்தில் நடிக்க வேண்டிய வயதை அதிகப்படி மேக்கப்பினால் சித்தி வேடத்துக்கும் இரண்டாவது கதாநாயகி வேடத்துக்குமாக இறக்கி, சினிமா உலகில் வளைய வருபவள்.

"வா ரத்னா. மற்ற எல்லோரையும் விட ரத்னாவை எனக்குத்தான் ரொம்ப பிடிக்கும். ஏன்னா அவளோட முதல் படத்துல நான் அவளுக்குப் பால் கொடுத்தவளாச்சே" என்று கொச்சையாய்ச் சிரித்து வரவேற்றாள்.

ரத்னாவுக்கு இது போன்ற சந்தர்ப்பங்களில் முகத்தில் உணர்ச்சியே இன்றி சிரிக்கத் தெரியும்.

"ஓகே. பேட்டி ஆரம்பிக்கலாம்"

"ரத்னா! என் கூட முதல் படத்துல ஆரம்பிச்சு எத்தனை படம் நடிச்சிருப்பே?"

"நாற்பத்து மூணு படங்கள்"

"உனக்கு ரொம்ப பிடிச்சபடம்?"

"எல்லாமே"

"எதுல நீ நல்லா நடிச்சதா ஃபீல் பண்ற?"

"நான் எதுலயுமே நடிக்கலை. டைரக்டர் அங்கிள் என்ன சொன்னாங்களோ அதை அப்படியே பண்ணினேன். அவ்வளவுதான்"

"சமீப காலங்களில் நீ நடிக்கறதில்லையே?"

"படிப்பில் கவனம் செலுத்தி வருகிறேன்"

"வெரிகுட். குமாரி ஆன பிறகு தொடர்ந்து நடிப்புலகிற்கு வருவியா?"

"திரை உலகம் அதுவரை என்னை நினைவு வைத்திருந்து அழைத்தால், நிச்சயம் நடிப்பேன்"

சுந்தரி லேசான புகையிலை வாசனையுடன் முத்தமிடுவதோடு பேட்டி முடிந்தது.

சினிமா பத்திரிகை நிருபர்கள் நிறைய போட்டோக்கள் எடுத்தனர். இருவரையும் உட்கார வைத்து, சிரிக்க வைத்து, நடக்க வைத்து சில டம்மி ஷாட்கள் எடுத்தார்கள். "இப்படி இல்லம்மா.... இப்படி" என்று சொல்லித் தோளைத் திருப்பி விடும் சாக்கில் கேமராமேன் புறங்கையினால் ரத்னாவை அழுத்திப் பார்த்துக் கொண்டான். அபரிமித வளர்ச்சிதான் என்று எண்ணிக் கொண்டான்.

எல்லாம் முடிந்து எல்லோரும் வெளியேறியவுடன் அம்மா திருஷ்டி சுற்றினாள். ரத்னா, அவஸ்தை முடிந்தது சனியன் என்று உடைகளைக் கழற்றி எறிந்து விட்டு மேக்கப்கைக் கலைத்தாள். குமாரி ஆனபிறகு நடிக்க வருவியா என்ற கேள்வி ஞாபகம் வந்தது. 'குமாரி ஆவது என்றால் என்ன?' சரவணன்

அங்கிளிடம் கேட்க வேண்டும். நேற்று பாதி பேசிக் கொண்டிருக்கும் போதே அம்மா கூப்பிட்டுத் தொலைய ஓடிவந்தது ஞாபகம் வந்தது.

உடைமாறி மீண்டும் பனிரெண்டு வயது அறியாமைக்கு இறங்கி இருந்தாள். அம்மாவிடம் போனாள்.

"என்ன செய்யணும் நான்?"

"சாயங்காலம் டான்ஸ் க்ளாஸ் போகணும். அதுவரை எதாவது பண்ணிட்டிரு"

"இன்னிக்குக் கட் அடிக்காம ஸ்கூல் போயிருந்தா கணக்கு டெஸ்ட் பண்ணிட்டிருந்திருப்பேன்."

"ஏண்டி! கேமரா லைட் முன்னால நிக்கும் போது கூட எப்படிடி ஸ்கூலை நினைக்க முடியுது உன்னால?"

"நான் போய் சரவணன் அங்கிள் கூடப் பேசிட்டிருக்கவா?"

"ஏன்? சரவணன் சார் இன்னிக்கு ஆபீஸ் போகலியா?"

"போகமாட்டேன்னு நேத்து சொல்லிட்டிருந்தாங்க"

"சரி, போ. தொந்தரவு பண்ணாம பேசிட்டிரு"

மாடிப்படியேறி "அங்கிள்!" என்றபடியே உள்ளே நுழைந்த ரத்னா சுற்றிலும் பார்க்க அறையே வெறிச்சென்று இருந்தது. ஒரே ஒரு பெட்டிதான் இருந்தது. சுவரில் முன்பு மாட்டப்பட்டிருந்த, ஒட்டப்பட்டிருந்த படங்கள் நீக்கப்பட்டு ஆங்காங்கே வெள்ளை நிறம் செவ்வகமாய் இருந்தது. கட்டிலும் அதன் மேல் கிடந்த தலையணையும் ஒற்றை பெட்ஷீட்டும் தான் பாக்கி என்பது போல் இருந்தது அறை.

"சாமானெல்லாம் எங்கே?"

"எல்லாம் மெள்ள மெள்ள கடத்தி ஸ்டேஷன் க்ளாக் ரூமுக்குப் போயாச்சு"

ரத்னாவுக்குப் படபடப்பாக இருந்தது.

"இந்தா. உன் டிரஸின் கிட்ஸ். நேத்து உங்கம்மா கூப்பிட்ட அவசரத்தில் வச்சிட்டு ஓடிட்ட. எவ்வளவு ஆசையா உனக்காக வாங்கிட்டு வந்தேன்"

"சாரி அங்கிள்" என்று எடுத்துக் கொண்டாள்.

"இன்னிக்கு சாயங்காலம் நான் வரமாட்டேன். டான்ஸ் க்ளாஸ்" என்று சிரித்தாள். "கடைசி க்ளாஸ்" என்றாள், பின் இணைப்பாக கண்களில் கள்ளத்தனம் மின்ன.

சரவணன் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் டி.வி. பேட்டி பற்றி எதுவும் கேட்காதது அவளுக்குப் பிடித்திருந்தது.

"நாளைக்கு நான் என்ன அங்கிள் செய்யணும்?"

"சொன்னேனில்லியா? நீ வழக்கம் போல ஸ்கூலுக்குப் போ. கேட்ல இறங்கினப்புறம் உள்ளே போகாதே. வெளியே நில்லு நான் வந்து பிக்கப் பண்ணிக்கறேன்."

"என்ன எடுத்துக்கணும்,"

"உன் இஷ்டம். நீ ஆசைப்படற எல்லாம்"

"டிரஸ் எடுத்துக்க முடியாதே"

"நோ ப்ராப்ளம். நான் வாங்கித் தர்றேன். உன் புத்தகப்பை கொள்ற அளவு என்ன ஆசையோ எடுத்துக்கோ"

கொஞ்ச நேரம் மௌனம்.

"நல்லா யோசிச்சுக்கோ ரத்னா. அப்புறம் பாதி வழில அம்மா தேடுது, அப்பாகிட்ட போகணும்னு அழமாட்டியே"

"சேச்சே! அங்கிள் கூட இருக்கும் போது நான் யாரையும் தேடமாட்டேன்."

"அப்பாவை?"

"ம்ஹூம். தினம் குடிக்கிறார். என்னை சீக்கிரம் பெரிசாகுடி பெரிசாகுடின்னு தொல்லை பண்றார். சே!"

"அம்மா?"

"ராட்சசி. என்னை தினமும் குளிக்கும் முன்னால என்ன செய்யச் சொல்லியிருக்கா தெரியுமா?"

"வேண்டாம்"

"கண்களில் நீர் முட்டியது ரத்னாவுக்கு. மெள்ள சரவணனின் அருகில் சென்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். ஐ லவ் யூ ஸோ மச் அங்கள்" என்றாள்.

சரவணன் சிலையாக இருந்தான்.

# 2



காலையில் எழுந்ததில் இருந்தே படபடப்பாக இருந்தது ரத்னாவுக்கு. அம்மாவோ, அப்பாவோ இப்போது எழுந்தே இருக்கமாட்டார்கள். ரத்னா தானாகவே குளித்து பள்ளிக்குத் தயாராக வேண்டும். அவளுக்கு 'யாராவது தன்னை எழுப்பி விட்டு தான் சிணுங்கி புரண்டு படுத்து பிறகும் பிடிவாதமாக எழுப்பி குளிக்க வைத்து உடைமாற்றி விட்டு மறுக்க மறுக்க சாப்பாடு ஊட்டி புத்தகப்பை எடுத்துக் கொடுத்து வாசல்வரை வந்து ரத்னா கிளம்பும் போது டாட்டா காண்பித்து பார்த்து பத்திரமா போயிட்டுவா என்று சொல்ல வேண்டும்' என்கிற ஆசை நிறைய உண்டு. நான்கைந்து படங்களில் தான் அது நிறைவேறியது.

நிஜத்தில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அவளுடைய ஆசைகள் புரிவதில்லை. சாப்பாடு, வேலைக்காரி செய்து மேசைமேல் இருக்கும். இவள் சாப்பிட்டாலும் சாப்பிடாவிட்டாலும் அவளுக்கு ஒன்றும் வேறுபாடு கிடையாது.

மத்தியானத்துக்கு டிபன் பாக்ஸ் ரெடியாக்கித் தருவாள். ரத்னா இயந்திரம் மாதிரி எடுத்துக் கொண்டு கிளம்புவாள். அம்மா தப்பித் தவறி விழித்திருந்தால் டாட்டா சொல்ல ஆசைப்படுவாள். அம்மா அந்த நேரம் பார்த்து பாத்ரூம் போயிருப்பாள்.

'உன்னை யார் படிக்கச் சொன்னார்கள்? பிடித்தால் படி. எப்போ வெறுப் படிச்சாலும் நின்னுக்கோ' என்கிற அப்பாவை நினைத்தாலே எரிச்சலாக இருக்கும்.

குளித்துவிட்டு வந்து மணிபார்த்தாள். எட்டு. அவசரமாக உடைமாற்றி னாள். புத்தகப்பையைக் கொட்டிளாள். உள்ளே தனக்கு மிகவும் பிடித்த ஒரே ஒரு உடையை எடுத்துக் கொண்டாள். சரவணன் வாங்கித் தந்த கிட்ஸ் அட்டைப் பெட்டியைப் பிரித்து பென்சில்கள், ரப்பர், பிரஷ்கள், பெயின்ட்கள் எல்லாம் எடுத்துக் கொண்டாள். பெரியசைஸ் டிராயிங் நோட்களில் ஒன்றுதான் வைக்க இடமிருந்தது. மற்றதை விட்டு விட்டாள். பிடித்த ஒரு டைரி, பேனா எடுத்துக் கொண்டாள்.

மணி எட்டேகால். அவசரமாக சாப்பாட்டு மேசைக்கு வந்தாள். சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. டிபன் பாக்ஸை விட்டுப் போனால் சந்தேகம் வரலாம். எடுத்துக் கொண்டாள்.

வாசலுக்கு வந்து ஷூ மாட்டிக் கொண்டாள். தலை தன்னிச்சையாக மேலே பார்த்தது. வழக்கம் போல் சரவணன் நின்று டாட்டா காண்பித்தான்.

ஆட்டோ பிடிக்க மேரி வீடுவரை போகவேண்டும். போனாள். ஆட்டோ கிளம்பி இன்னொரு பெண்ணையும் ஏற்றிக்கொண்டு விரைந்தது.

"உன் லூனா எப்போ சரியாகும்?" என்று கேட்டாள் மேரி. ஆட்டோவின் இடநெருக்கடியில் பாதிக்கப்படுவது குண்டான அவள்தான். அந்த எரிச்சல்.

"இன்னிக்கு ஈவினிங் வந்திடும் மேரி. இன்னிக்கு தான் கடைசியா ஆட்டோ பயணம். ஓ.கே?"

"ஏய்! என்னது? உன்னோட பைல புக்ஸைக் காணோம். வேற என்னவெல்லாமோ இருக்கு?" என்று ஆச்சர்யமாய்க் கேட்டாள் மேரி.

பார்த்து விட்டாள்!

என்ன பதில் சொல்வதென்று விழித்தாள் ரத்னா. அதற்குள் ஸ்கூல் வந்துவிட ஆட்டோ நின்றது.

இறங்கினாள்.

"நீங்க உள்ளே போங்கடி. நான் இதோ வர்றேன்"

அவளிடம் காரணம் கேட்கும் பொறுமை இல்லாத மற்ற இருவரும் உள்ளே ஓடினார்கள்.

ரத்னா பள்ளிக்கூட வாசலை விட்டு சற்றுத் தள்ளி வந்து மரத்தடி ஒன்றில் நின்று கொண்டாள். கையில் கட்டியிருந்த சிறிய வாட்ச் மணி எட்டேமுக்கால் என்றது.

மெள்ள மெள்ள பள்ளி வரும் கூட்டம் குறைந்து, இல்லை என்று ஆனது. பள்ளி துவங்கும் மணி கேட்டது. ப்ரேயர் கேட்டது. சாலை வெறிச்சோடியது. பாதசாரிகள் மிகவும் குறுகியிருக்க ரத்னா தனியாகக் காத்திருந்தாள், சரவணன் அங்கிளுக்காக.

# 3



“பாப்போவோட பேட்டி டி.வி.ல வருது போல. நம்ம கோபால் சொன்னாப்ல” என்றபடியே அந்த கிளாஸில் ஐஸ்துண்டங்களைப் போட்டான் வேணு. சுந்தரத்தின் சிவந்த விழிகள் அந்தத் துண்டங்கள் மிதந்தபடி ஆடுவதை இச்சையுடன் பார்த்தான்.

“ஆமா நேத்து காலைல வந்திருந்தானுங்க” என்றபடியே அதனைக் கையில் ஏந்திக் கொண்டான் சுந்தரம். முகத்தைக் கூராக்கி வேண்டாவெறுப்பாய்க் குடிப்பவன் போல் பாதி கிளாஸைக் காலி செய்தான்.

“இப்பெல்லாம் கவனிப்பே இல்லை நம்ம ஸைடில் இருந்து”

“என்ன கவனிப்பு இல்லை? நம்ம வேணுவுக்கு இல்லாததா? என்ன வேணும் சொல்லு?”

“என்னத்தைச் சொல்ல? எல்லாம் மனசு இருந்து தானா பண்ணணும்”

“நான் என்ன பண்ணட்டும் வேணு. ரத்னா நடிச்சிட்டிருந்த வரைக்கும் வண்டி நல்லா ஓடிட்டிருந்தது. சனியன் வளர்ந்து தொலச்சு, நாலஞ்சு பல்லும் விழுந்து போச்சு. படம் நின்னு போச்சு. அப்புறம் எங்கே பார்ட்டியாவது மண்ணாவது, எல்லாம் போச்சு”

“நீங்க சொல்றதைப் பார்த்தா... பாப்பா இனிமே நடிக்கவே போறதில்லையா?”

“சீச்சி! பெரிசாகட்டும்னு காத்திட்டிருக்கேன். என்ன ஊட்டம் தெரியுமா? தினம் உளுந்து தான். கருப்பட்டிதான்...”

“அப்போ பாப்பா பெரிசாகிற வரை நடிக்க வைக்கறதா இல்லை?”

“நான் நடிக்க வைக்க மாட்டேன்னா சொல்றேன்? யாராவது கூப்பிடட்டுமே”

வேணு ஒன்றும் பேசாமல் கையில் இருந்த கவரினைப் பிரித்து உள்ளேயிருந்து மூன்று கலர் போட்டோக்களை உருவினான். மூன்றும் ரத்னா. நேற்று டி.வி. பேட்டியின் போது எடுக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

“அட! நம்ம ரத்னா”

“பாப்பாதான். எவ்ளோ பெரிசாயிடுச்சு பாருங்க. நம்ம டைரக்டர் நாயர் இந்த போட்டோக்களைக் காலைல பார்த்தார். அவர் எடுத்திட்டிருக்கற ஒரு படத்துக்கு இது அப்படியே மேட்ச் ஆகும்னு அபிப்ராயப்பட்டார். உங்ககிட்ட கேட்டுச் சொல்றேன்னு சொல்லியிருக்கேன்”

“அட என்கிட்ட கேக்க என்னப்பா இருக்கு?”

வேணு பேச்சை நிறுத்தி கிளாஸில் ரம்மையும் விஸ்கியையும் சமபங்கு ஊற்றி



சோடா கலந்து நீட்டினான்.

"இன்னிக்கு நைட்டே அவரைப் பார்த்து சரின்னு சொல்லிருய்யா. கூப்பிட்டு விட்டார்னா நான் பேசிக்கறேன்" என்றபடியே கிளாஸினை உறிஞ்சினான் சுந்தரம்.

"அதுக்கில்லை. கதை கொஞ்சம் ஒரு மாதிரி. பாப்பா வேலைக்காரப் பொண்ணா நடிக்கணும். பணக்கார வீட்டுப் பையன் ஒரத்தனோட சபலங்களைப் பற்றின படம். கொஞ்சம் அப்படி இப்படி இருக்கும்..."

சுந்தரம் லேசாக உறைந்தான்.

"கவலைப்பட வேண்டாம் சுந்தரம் சார். படம் மெயினா வடக்கே போகப் போகுது. அப்படியே யாராவது பார்த்துக் கேட்டால் கூட ரத்னாவே இல்லைன்னு சொல்லிடறது. வேற பேர் போட்டுக்கலாம். ராணி அப்படின்னு..."

"சுந்தரம் கொஞ்சம் யோசித்தான்."

"பணம் தாராளமா இருக்குமேன்னு சொன்னேன். நாயரைப் பற்றி உங்களுக்கே தெரியும். சினிமா உலகத்தின் மூலமா செக்ஸ் எஜுகேஷன் பரவணும்னு பரபரப்பா பேட்டி எல்லாம் கொடுத்து பார்லிமென்ட் வரைக்கும் பேசவச்சவர்"

"அதெல்லாம் சரிதான்..." என்று சுந்தரம் இழுக்க "வேணும்னா இப்பவே போய்ப் பேசி முடிச்சிடலாம்" என்று தூண்டினான் வேணு.

நாயர் மிக எளிமையாக வேட்டி, கதர் ஜிப்பா, விபூதி, மீசை இல்லாத முகம் என்று இருந்தார்.

"உங்க பொண்ணு முகத்துல ஒரு அறியாமை இருக்கு பாருங்க... அது போட்டோல தெரியுதுன்னா பெரிய விஷயம். உள்ளுக்குள்ளே ஏதோ சோகங்கறது கூடத் தெரியுதுன்னா என்ன ஒரு ஃபோட்டோ ஜெனிக் ஃபேஸா இருக்கணும்?" என்று சுத்தமான டைரக்டர் மொழி பேசினார்.

"என் கதைல வர்ற வேலைக்காரப் பொண்ணுக்கு இந்த குணங்கள் இந்த ரெண்டுங்கெட்டான் வயசு எல்லாம் வேணும். ரத்னா பொருத்தம்னு தோணுது"



கவிதாலயம்!

ஜின் கான்டேல் என்பவர் ஒரு கவிஞர். கவிதைகளாக எழுதிக் குவித்தார். அவர் எழுதியது தங்கப் பேனாவாலா? அல்ல, தங்க ஊசியால்! அட! ஆமாம். ஆனால் அவர் கவிதைகளைக் காகிதங்களில் எழுதவில்லை!

பிறகு?

பிரான்சில் உள்ள சான்டிவி காடுதான் அவரது கவிதாலயம்! அந்தக் காட்டில் உள்ள மரங்களில் தங்க ஊசியால் கவிதைகளை எழுதி விடுவார். பின்னர் அவர் நண்பர்களால் பிரதியெடுக்கப்பட்டு அச்சுக்குப் போயிற்று.

1630 ம் ஆண்டு பிறந்த அவர், 67 ஆண்டுகளுக்குப் பின்னர் 1697ம் ஆண்டு காலமானார்.

-பாமா

"நீங்க சொன்னா சரிதான்"

"ஆனா ஒண்ணு, முதல்லயே தெளிவா சொல்லிடறேன். படம் ஒரு மாதிரிப் பட்டதுதான். ஒரு சீன் அல்லது ரெண்டு சீன்ல வெறும் ஜட்டி பிராவோட நிக்க வேண்டிவரும். பணம் ஒயிட் பிளாக்னு தாராளமா தர்றேன். நடுவுல தகராறு எல்லாம் நமக்குப் பிடிக்காது. ஆமா"

அவர் சொன்ன தொகை சுந்தரத்தை வாய் பிளக்க வைத்தது.

டாக்ஸியில் வந்து வீட்டு வாசலில் இறங்கினான் சுந்தரம். மிக லேசான தள்ளாட்டம் இருந்தது.

"வந்திட்டீங்களா, எங்கே போய்த் தொலைஞ்சீங்க?" என்றபடியே ஓடி வந்த சுகுணா கிளம்பிச் சென்ற டாக்ஸியைக் கண்டு முறைத்தாள்.

"என்ன திடீர்னு டாக்ஸி?" என்ற கோபக் குரலில் கேட்க சுந்தரம் சிரித்தான். "அடச்சீ! இன்னும் ஆறுமாசத்தில் பார். சொந்தக் காரில் வந்து இறங்கறேன்"

"குடி வேறயா? பாவி மனுஷா! நான் ரத்னாவைக் காணோம்னு பதறிட்டிருக்கேன்..." என்று ஆரம்பித்து சுகுணா பேசிய மற்ற விஷயங்கள் எதுவுமே கேட்கவில்லை சுந்தரத்துக்கு. போதை தெளிவாக இறங்கிவிட்டிருந்தது.

# 4



"எப்பவும் ஸ்கூல் முடிஞ்சா நேரா வீட்டுக்குத்தான் வருவா. இன்னிக்கு அஞ்சரை ஆகியும் காணோம்ன உடனேதான் டான்ஸ் க்ளாஸுக்கு நேரே போயிட்டாளோன்னு அங்கே போன் பண்ணிக் கேட்டேன். வரலைன்னு சொன்னாங்க. இன்னிக்கு லூனா ரிப்பேர்னு அவளோட ஃபிரண்ட் மேரி கூட ஆட்டோல தான் போனா. மேரியிடமும் கேட்டுட்டேன். அவள் ஸ்கூலுக்குள்ளேயே வரலையாம்.." சுகுணா கிட்டத்தட்ட குரல் உடையத் தொடங்க இன்ஸ்பெக்டர் ஆனந்தராஜ் அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தபடி அவளுடைய வார்த்தைகளை உள்ளுக்குள் எடைபோட்டுக் கொண்டிருந்தார்.

"அப்புறம் மேரியைக் கூட்டிக் கொண்டு ரத்னாவின் ஃபிரன்ட்ஸ், சர்க்கிள் முழுக்க தேடியாச்சு. எங்கேயும் வரலையாம். பயம்மா இருக்கு சார்."

"சேச்சே! இதில பயப்படறதுக்கு என்ன இருக்கு? நீங்க தைரியமா வீட்டுக்குப் போங்க. காலைல வரைக்கும் வெயிட் பண்ணுங்க, வந்திருவா. பயப்படும்படியா ஒண்ணும் இருக்காது. நான் காலைல உங்க வீட்டுக்கு வர்றேன்..."

"சார்! ரத்னா எங்களுக்கு ஒரே பொண்ணு..." என்று ஆரம்பித்த சுந்தரத்தை கைதூக்கி அமர்த்தினார்.

"நீங்க சொல்ல வேண்டியதே இல்லை. இரண்டு முறை முதலமைச்சர் விருது வாங்கின குழந்தை நட்சத்திரத்தை கிட்நாப் பண்றதுங்கறது கஷ்டமான காரியம். அதிகபட்சமா பணம் எதிர்பார்த்து பண்ணின காரியமா இருக்கும். டோன்ட் ஒர்ரீ. இது மாதிரி கேஸெல்லாம் எங்களுக்கு புகை ஊதற மாதிரி. இரண்டு நாளில் ரத்னா பத்திரமா உங்களுக்குக் கிடைச்சிடுவா. போதுமா? எல்லாவற்றுக்கும் மேலே எனக்கும் எங்க வீட்ல எல்லோருக்கும் பேபி ரத்னான்னா உயிர். ஐ வில் டேக் பர்ஸனல் இன்ட்ரஸ்ட் இன் திஸ் கேஸ்" என்று அவர்களை வழியனுப்பி வைத்தார். அவர்கள் போனதும் அவர்களுடைய வீட்டு போனை டேப் செய்ய ஏற்பாடு செய்தார்.

மறுநாள் காலை சுந்தரத்துக்கு போன் பண்ணிய போது 'ரத்னா வரவில்லை, அவளைப் பற்றி தகவலும் இல்லை' என்று தெரிந்தது. பைக்கை அவர்கள் வீட்டுக்குத் திருப்பினார் இன்ஸ்பெக்டர் ஆனந்தராஜ்.

எக்ஸ்டன்ஷன் ஏரியாக்களுக்கே உரிய மயான அமைதி. விவிதபாரதி கேட்டால் கூட அமைதியாக வைத்துத் தான் கேட்பார்கள். ஏதாவது குறுக்கே நெடுக்கே விரையும் ஷோகன்களோ பேந்த்தர்களோ சப்தம் ஏற்படுத்தினால் தான் உண்டு. அங்கங்கே மரங்களில் அம்மாப் பறவை விட்டுப் விட்டுப் போன கோபத்தில் குஞ்சுப் பறவைகள் ஏற்படுத்தும் சப்தம்தான் அங்கே அதிக பட்சம்.

சுகுணா வந்து கேட்டைத் திறந்தாள்.

வாசலில் வந்து விழுந்திருந்த சினிமா எக்ஸ்ப்ரஸும் வண்ணத்திரையும் தொடப்படாமல் கிடந்தன.

"என்ன சார் ரத்னா பற்றி ஏதாவது தகவல் உண்டா?" என்று பதறினான் சுந்தரம்.

"அநேகமா நைட்டுக்குள் வந்திருவாள்னு நினைச்சேன். இது கிட்நாப்பிங் கேஸ் மாதிரி தான் தெரியுது. உங்களுக்கு ஏதும் போன் வந்ததா?"

"இல்லை"

"வரும். நிச்சயமாக பணம் கேட்டோ எதாவது மிரட்டியோ போன் வரும். நீங்க உங்களுக்குச் சரியாக கேட்கலை என்பது போலவோ லைன் கிளியர் இல்லை என்பது போலவோ நடித்து, ஹலோ ஹலோ என்று கத்தி எதிராளியை நிறைய நேரம் பேசவைங்க. இந்த மீன்டைம் நான் கன்ட்ரோலுக்குச் சொல்லி ஒரு தரோ சர்ச்சுக்கு ஏற்பாடு பண்றேன்." என்று எழுந்தார் ஆனந்தராஜ்.

"ரத்னா எந்த ஸ்கூல்ல படிக்கறா?"

"மேரி வீடு எங்கே இருக்கு?"

சொன்னார்கள்.

மாலைப் பத்திரிகைகள், அன்று சென்னையில் கூடிய அரசியல் கட்சியின் காரிய கமிட்டி கூட்டத்தின் அடிதடி சட்டை கிழிப்பு சம்பவத்தை இரண்டாம் பக்க செய்தியாகத் தள்ளிவிட்டு ரத்னா கடத்தப்பட்டதைத் தலைப்புச் செய்தியாக்கி இருந்தன. ரத்னாவின் புகைப்படங்கள் தெளிவில்லாத ப்ளாக்களில் தேடி எடுக்கப்பட்டிருப்பது தெரிந்தது. ரத்னாவின் பிறப்பு, வளர்ப்பு, படிப்பு,

நடிப்பு எல்லாம் அலசப்பட்டு நகரத்துக்கு பரபரப்பான ஒரு செய்தியாகக் கொறிப்பதற்குத் தந்திருந்தனர்.

ஆனந்தராஜ் மேரி வீட்டில் காபி குடித்துக் கொண்டிருந்தார். எதிரே உட்கார்ந்திருந்த மேரியின் கண்களில் அச்சம் பூரணமாக கடைவிரித்திருந்தது. பொட்டு இல்லாத நெற்றியுடன் மேரியின் அம்மா உள் அறையின் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

"சொல்லும்மா. எத்தினி மணிக்கு ஸ்கூலுக்குப் போனீங்க"

"எட்டரைக்கு அங்கிள்"

"குட். யாரெல்லாம் போனீங்க?"

"நானும் சாந்தியும் தான் எப்போதும் போவோம். ரத்னாவுடைய ஓனா ரிப்பேர்னு சொல்லி இங்கே வந்து எங்க ஆட்டோல சேர்ந்திட்டா."

"சரி நேத்திக்கு என்ன நடந்தது?"

"ரத்னா இங்கே வந்தா. மூணுபேரும் போனோம். ஸ்கூல் வாசல்ல இறங்கின உடனே அவள் உள்ளே வரலை."

"ஏன்?"

"தெரியலை. நீங்க போங்க வர்றேன்னு சொன்னா. எங்களுக்கு ஹோம் ஒர்க் கொஞ்சம் பாக்கி இருந்தது. அதனால நானும் சாந்தியும் அவசரமா உள்ளே ஓடிட்டோம்."

"நேத்து எப்படி இருந்தா ரத்னா? எதாவது வித்தியாசமா சொல்ல முடியுமா? நல்லா யோசிச்சுப் பாரு. சந்தோஷமா இருந்தாளா, எங்கேயாவது போகப் போறேன்னு சொன்னாளா?"

மேரி பயத்துடன் யோசித்தாள். "சொல்லத் தெரியலை அங்கிள்" என்றாள் வேர்த்திருந்த உள்ளங்கைகளைப் பாவடையில் துடைத்தபடியே.

"இட்ஸ் ஆல் ரைட்" என்று மேரியைத் தட்டிக் கொடுத்து எழுந்தார். "குட் கேர்ள்" என்றார், அவளுடைய அம்மாவைப் பார்த்தபடி.

மேரிக்கு திடீரென்று ஞாபகம் வந்தது.

"அங்கிள்! நேத்திக்கு வரும்போது ரத்னா புக்ஸ் எடுத்திட்டு வரலை"

ஆனந்தராஜுக்குள் மின்னல் அடித்தது.

"சொல்லும்மா."

"அவளுடைய பேகில் புக்ஸ் இல்லை. வேற என்னவெல்லாமோ இருந்தது. மூடியிருந்ததால தெரியலை. எதோ பாக்ஸ் பென்சில்கள் மாதிரி..."

"நீ கேட்கலியா?"

"கேட்டேன். புக்ஸ் கொண்டு வரலியான்னு கேட்டேன். அதுக்கு..." என்று கூரைபார்த்துயைப் கண்சுருக்கி உதடு பிதுக்கி யோசித்தாள் மேரி. "அவள் பதில் சொன்னாளா, என்ன சொன்னாள்னு ஞாபகம் வரமாட்டேங்குது"

"ம்ஹூம் தெரியலை அங்கிள். அவள் பதில் சொல்லலைன்னு நினைக்கிறேன்"

என்றாள் முடிவாக.

ஆனந்தராஜ் தன் புலன் விசாரணையை, மேரிவீடு, சாந்திவீடு, ஆட்டோ டிரைவர், ஸ்கூல் வாசலில் இருந்த கடைகள், ரத்னாவின் டீச்சர்கள், டான்ஸ் க்ளாஸ் என்று சுற்றி அலைந்து நடத்தி, அன்று சுந்தரம் வீட்டுக்கு வந்த போன் கால்களைப் பார்த்து எல்லாம் வெறும் துக்க விசாரிப்புகளே என்று அறிந்து சோர்ந்தார். எங்கேயோ தவறு செய்கிறோம் என்கிற உறுத்தல் மட்டும் இருந்தது.

வெறுமனே கடத்தல் என்றால் நிச்சயம் பணம் கேட்டு எதாவது மிரட்டல் வந்திருக்க வேண்டுமே. இது வேறு விதமான கடத்தலோ. அசிங்கமான நோக்கம் என்றால் பிரபலமான குழந்தையைக் கடத்துவானேன்...

சுந்தரத்தின் வீட்டுக்குப் போனார் அன்று மாலை.

“ரத்னாவுக்கு என்று தனி அறை ஏதாவது உண்டா?”


சுகுணா காட்டினாள்.

உள்ளே போய் லைட்டைப் போட்டார்.

சிறுபிள்ளையின் அறை என்பதுபோல் ஒழுங்கற்றுக் கிடந்தன எல்லாமே. மேசையின் மீது அலமாரியின் மீது நாற்காலியின் மீது எல்லா இடங்களிலும் புத்தகங்கள் நோட்டுகள். சுவர்களில் தொங்கிய ஓவியங்கள்.

“ரத்னாவுக்கு ஓவியம்னா உயிர். வரைந்து தள்ளிட்டே இருப்பா”

நிறைய படங்களில் சோகப் பின்னணி. எங்கெல்லாம் கண்களோ அங்கெல்லாம் துளிர்ந்திருந்த கண்ணீர்த் துளி. சில கணங்கள், வந்த நோக்கம் மறந்து பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் ஆனந்தராஜ்.



**எலிப் புதிர்!**

ஒரு வீட்டில் எலித்தொல்லை அதிகமாக இருந்தது. அதை சோமு, தன் நண்பர் சேகரிடம் சொன்னான். அவரோ என் வீட்டில் பூனைத்தொல்லை இருக்கிறது என்றார். சேகர் ஒரு காரியம் செய்தார். 5 பூனைகளை எடுத்து வந்து, சோமுவின் வீட்டில் விட்டு விட்டார்.

சோமுவிற்கு ஆச்சர்யம். ஐந்து பூனைகள் உள்ளே பூந்து விளையாடி, ஐந்து எலிகளை ஐந்தே நிமிடத்தில் சாப்பிட்டு விட்டன!

சேகர், சோமுவிடம் கேட்டான், “அப்படியானால் நூறு பூனைகள், நூறு எலிகளைச் சாப்பிட எத்தனை நேரம் ஆகும்?”

சோமு சொன்ன பதில் என்ன?

(விடை: நூறு நிமிடம் அல்ல. ஐந்து நிமிடமேதான்!)

- கோபு.

"எதாவது லட்டர் எழுதி வச்சிருந்தாளா?"

"இல்லையே சார்"

"நிதானமாகத் தேடினார். மேரி சொன்னது சரிதான். எல்லா புத்தகங்களும் இங்கேயே உள்ளன என்றால், அன்று என்னதான் கொண்டு சென்றாள்?"

மனதினுள் லேசாக, 'அவள் கடத்தப்படவில்லையோ, தானே தான் எங்கோ போய்விட்டாளோ' என்கிற சந்தேகம் துளிர்விட ஆரம்பித்தது.

"மிஸ்டர் சுந்தரம்! கொஞ்சம் சின்சியரா நீங்க ரெண்டுபேரும் தேடிப்பார்த்து சொல்லுங்க. ரத்னாவுடைய டிரஸ், மற்ற ஐட்டங்கள், பணம், நகை எல்லாமே பத்திரமா இருக்கான்னு பார்த்துச் சொல்லுங்க"

சுந்தரமும் சுகுணாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நகர்ந்தனர்.

ஆனந்தராஜ் தேடித் தேடி சலித்தார். ஒவ்வொரு நோட்டாகப் புரட்டியபோது அந்த பெரிய டிராயிங் நோட்டும் கண்ணில் பட்டது. எடுத்துப் பார்த்தார். புதியது புரட்டினார். உள்ளே ரசீது. விலைப்பட்டியல் நிறைய டிராயிங் கிட்ஸ் விவரங்கள். பையில் வைத்துக் கொண்டார். உபயோகமா எதுவும் கிடைக்கவில்லை.

வெறுமனே நேரம் போனது தான் மிச்சமாக இருந்தது. சுகுணாவும் சுந்தரமும் வந்து எல்லாப் பொருட்களும் பத்திரமாக உள்ளன என்ற கூற இன்னும் சோர்வாக இருந்தது.

மெல்ல நடந்தார். பைக் பக்கத்தில் வந்து திரும்பினார்.

மேல பார்த்தவர் கண்களில் பட்டது சரவணனின் போர்ஷன்.

காம்பவுண்ட் சுவரின் கேட்டில் இருந்து வீட்டு வாசலுக்கு இருபதடி நீண்ட சிமிண்ட் கம்பளம் போல் பாதை. இருபக்கமும் மண். தோட்டம் மாதிரி செடிகள். நிறைய பூச் செடிகள். பெரிய கீழ் போர்ஷன். மாடிப்படி கீழ்ப் போர்ஷனுக்குச் சம்பந்தமில்லை என்பதுபோல் கோபமான ஒரு மூலையிலிருந்து வெளிப்புறமாக எழுந்திருந்தது. அவ்வளவு பெரிய கீழ்ப் போர்ஷனுக்கு மாடியில் ஒரே ஒரு ஹாலும் அடுப்படியும் என்று சிறிய போர்ஷன். 'எண்ணூறு வாடகை. பாத்ரூம் எல்லாம் மாடியிலேயே. இரண்டு வருஷம் கழிச்சு கேள்வி கேட்காமல் காலிபண்ணிடனும்' என்கிற கண்டிஷனில் சரவணன் குடிவந்து ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டன.

"மேலே யார் இருக்கறது?" என்று கேட்டார் ஆனந்தராஜ்.

"சரவணன்னு ஒரு பேச்சலர். நல்ல பையன். நம்ம ரத்னாவுக்கு ரொம்ப நெருங்கின ஃப்ரண்ட்"

"அவருக்கு எதாவது தெரியுமான்னு கேட்டீங்களா?"

"அவர் எங்கே, ரெண்டு நாளா கண்லயேபடலை. அவர் வர்றதும் தெரியாது போறதும் தெரியாது. இன்னிக்குக் கூட இன்னும் வரலை போல. லைட் எரியக் காணோமே"

"எங்கே வேலை பார்க்கறார்?"

சுந்தரம் சொன்னான்.

"நேத்து சாயங்காலம் பார்த்தீங்களா?"

இருவரும் விழிக்க, ஆனந்தராஜூக்குள் போலீஸ் மூளை விழித்தது.

"அப்படீன்னா ரத்னா காணாமல் போனதில் இருந்தே இவரும் காணோமா? ஊர் ஃபேமிலில்லாம் எங்கேயாம்?" என்று கேட்டபடியே மாடிப்படியை நோக்கி நடந்தார்.

சுந்தரமும் சுகுணாவும் வியப்பும் திசைப்புமாய்ப் பின்னயே சென்றனர்.

மாடி அறை வாசலில் சின்ன பூட்டுதான் இருந்தது.

ஆனந்தராஜ் சன்ஷேட் வழியாக நடந்து மாடியின் பாபட் சுவரைத் தாவிக் குதித்து அந்த அறையின் மறு பக்கமாக இருந்த சன்னல் வழியே பாக்கெட்டிலிருந்து பென்டார்ச் எடுத்து அடித்துப் பார்க்க, அது காலி செய்யப்பட்டிருக்கும் அடையாளங்கள் புலப்பட்டன.

மீண்டும் ஏறித் தாவி மாடிப்படிக்கு வந்தார். பூட்டை இறுக்கிப் பிடித்து ஓங்கி இழுக்க பாட்லாக் கையோடு வந்தது. கதவைத் திறந்து உள்ளே நுழைந்து லைட்டைப் போட்டார்.

"அடப்பாவி!" என்று கத்தினாள் சுகுணா.

"சொல்லாமல் கொள்ளாமல் காலி செய்துட்டுப் போயிருக்கான் சார்"

"சார்! ஒருவேளை இவன்தான் ரத்னாவைக் கடத்திட்டுப் போயிருப்பானோ..." என்று பதறினான் சுந்தரம்.

"கொஞ்சம் பொறுமையா இருங்க. இங்க இருந்தவன் பேர் என்ன சொன்னீங்க?"

"சரவணன்"

"இவனுக்கும் ரத்னாவுக்கும் பழக்கம் எப்படி?"

"நல்லா பழகுவான் சார். ரத்னாவுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பான். கிட்டத்தட்ட தினமும் ரத்னா மாடிக்கு வந்து ஒண்ணு ரெண்டு மணி நேரமாவது இருப்பா"

"பாவி நாசமாப் போக... ஐயோ ரத்னாவை இவனே கடத்திட்டுப் போயிட்டானா..."

"ஷ். அவசரப்படாதீங்க. அவன் வேலை பார்த்த இடத்தில் கன்ஃபார்ம் பண்ணிக்கலாம். அவன் ஊர், சொந்தக்காரங்க பத்தி தெரியுமா?"

"தெரியாது சார். அநாதைன்னு சொன்ன ஞாபகம்."

"அவன் கூப்பிட்டா கூடப் போகும் அளவுக்கு ரத்னா அவனை நம்புவாளா?"

"பாவி எப்படிக் கூப்பிட்டானோ..."

**ம**றுநாள் காலைப் பத்திரிகைகள் விதவிதமாய்ச் செய்தி வெளியிட்டன.

மாடிவீட்டு வாலிபருடன் குழந்தை நடிகை ஓட்டம். கணக்கு சொல்லிக் கொடுத்தே கணக்குப் பண்ணியவர். பேபி ரத்னா மாயம். மாடிவீட்டு வாலிபருக்கு போலீஸ் வலைவீச்சு. குழந்தை நடிகைக்குக் காதலா? என்று விதவிதமான

தலைப்புகள்.

பத்துமணி அளவில் சுந்தரத்துக்கு அந்த போன் வந்தது, பத்திரமாக ரத்னா வேண்டுமென்றால் இரண்டு லட்சம் பணம் கேட்டு.

# 5



காலையில் இருந்தே போன்கள் வந்த வண்ணமாய் இருந்தன. நடிகர்கள், நடிகைகள், தயாரிப்பாளர்கள், டைரக்டர்கள் என்று ரத்னாவை நினைவு வைத்திருந்த எல்லோரும் ஒருவர் மாற்றி ஒருவர் போனில் விசாரித்தனர். சிலர் நேரில் வந்தும் சுந்தரத்துக்கும் சுகுணாவுக்கும் தைரியம் சொல்லிச் சென்றனர்.

நேற்ற இரவுவரை அவள் கடத்தப்பட்டிருப்பாள் என்று நம்பிக் கொண்டிருந்த போது கூட ஆயாசம் இல்லை. அவள் சரவணனுடன் ஓடிப்போய் விட்டாள் என்கிற செய்தி அவளைப் படுத்தியது. 'இத்தனை நாள் பெற்று வளர்த்தவர்களை விட, அவளை நடிகையாக்கி பணமும் புகழும் ஏற்படுத்தித் தந்தவர்களை விட, ஏழெட்டு மாதங்களே பழகியவன் எப்படி முக்கியமாகிப் போனான்?'

'இந்தச் சின்ன வயதில் காதல் கத்தரிக்காய் போன்ற விஷயங்கள் உண்டாக வாய்ப்பு இல்லை. ஒருவேளை வந்திருக்குமோ? சினிமா உலகத் தொடர்பினால் சிறு வயதிலேயே நிறைய விஷயங்கள் ஆர்வத்தையும் சந்தேகத்தையும் கிளப்பி இருக்குமோ? கூடாத காட்சிகள் எதுவும் அறைகுறையாகக் கண்ணில் பட்டிருக்குமோ? சரவணனும் கல்யாணம் ஆகாதவன்... ஐயோ...'

நினைக்க நினைக்க மனம் விகாரமான பலவிதக் காட்சிகளை ஏற்படுத்த உடம்பு நடுங்கியது. லேசாக அழுகை கூட வந்தது. அப்போதுதான் போன் அடித்தது.

இன்னொரு துக்க விசாரிப்பாக இருக்கும் என்கிற அசட்டையுடன் தான் அதை எடுத்து காதில் வைத்தான்.

"ஹலோ, சுந்தரம் ஹியர்"

"அப்பா! அப்பா! என்னைக் காப்பாத்துங்கப்பா..எனக்கு பயம்மா இருக்குப்பா..."

ரத்னாவின் குரல்.

பதறிப் போய் எழுந்தான்.

"ரத்னா... ரத்னா... எங்கேம்மா இருக்கே? ஹலோ.." மறுமுனையில் இப்போது வேறு குரல்.

"என்ன மிஸ்டர் சுந்தரம்! பெற்ற பாசமா? உங்க பொண்ணு பத்திரமா இருக்கா. நியூஸ் பேப்பர்ல என்னவெல்லாமோ கதைகள் வருதே. போலீஸ் டிராமாவா?

"ஹலோ! யார் நீங்க?- என்ன வேணும் உங்களுக்கு?"

"குட், நேரா பாயிண்டுக்கு வருவோம். நீ நாளைக்குள்ள ரெண்டு லட்ச ரூபாய் கேஷா தயார் பண்ணிவை. திரும்ப கான்டாக்ட் பண்றோம். போலீஸ் கீலீஸ்னு போனா என்னாகும்னு சொல்ல வேணாம்னு நினைக்கிறேன்"

மறுமுனை கட்டானது.

"என்னங்க? ரத்னாவா?" என்றபடி ஓடிவந்த சுகுணா, அவன் வாயையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சுந்தரம் சோர்வாக போனை வைத்தான்.

"சுகுணா! நம்ம ரத்னா பத்திரமா இருக்கா. போன்ல பேசினா"

சுகுணாவின் கண்களில் நீர் வந்து முட்டியது.

"வேறயாரோ கடத்திட்டுப் போயிருக்காங்க சுகுணா. சரவணன் இல்லைன்னு நினைக்கிறேன். ரத்னா பத்திரமா வேணும்னா ரெண்டு லட்சம் பணம் கேட்கறாங்க"

சுந்தரம் யோசனையுடன் தொப்பென்று உட்கார்ந்தான்.

"இன்ஸ்பெக்டர்ட்ட சொல்லிடலாமா?"

"வேணாம் சுகுணா." என்றான் பளிச்சென்று. "நம்ம போலீஸ் எல்லாம் எப்படின்னு தெரியும். அவங்களுக்கு ரத்னா, காணாமல் போன எத்தனையோ பேரில் ஒரு பொண்ணு. இந்த கேஸ், முடியாமல் இருக்கிற எத்தனையோ கேஸ்களில் ஒண்ணு. மொத்த போலீஸ் போர்ஸூரம் எல்லாவற்றையும் விட்டுட்டு நம்ம பின்னால சுத்துவாங்கன்னு எதிர்பார்த்தா அது பைத்தியகாரத்தனம் சுகுணா. அவங்க தடாலடியா எதாவது பண்ணப்போய் ரத்னாவை அந்தப் பாவிங்க கொன்னுபோட்டாங்கன்னு வச்சுக்கோ, போலீஸ் அதிக பட்சமா ஆறுதல் சொல்லிட்டு கொலைகாரனைப் பிடிக்கப்போறேன் பேர்வழின்னு கிளம்பிடுவாங்க. என்ன சொல்ற?"

சுகுணா, அவன் சொன்னதில் பாதிக்கு மேலான விஷயங்களைக் கேட்கவே இல்லை. மனதுக்குள் ரத்னா பத்திரமாய் இருக்கிறாள் என்ற செய்திக்காகவே கடவுளுக்கு நன்றி சொன்னாள்.

"என்ன சுகுணா சும்மாயிருக்கற?"

"நீங்க சொல்றதும் சரிதாங்க. நமக்கு ரத்னா தான் வேணும்.."

"அதனால ஆனந்தராஜூக்குச் சொல்ல வேண்டாம்"

"சரி, ஆனா பணம் கேட்கறாங்களே"

சுந்தரம் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு எழுந்தான். "நான் வெளியே போயிட்டு வர்றேன்" என்று கிளம்பினான்.

"இன்ஸ்பெக்டர் வந்தார்னா..."

"எதுவும் சொல்லாதே"

"நீங்க எங்கே போயிருக்கீங்கன்னு கேட்டா?"

"என்னையும் கடத்திட்டுப் போயிட்டான்னு சொல்லு" என்று சுள்ளென்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

சுந்தரத்துக்கு ரத்னாவின் பத்திரமான நிலைமை திருப்தி அளித்தது என்றாலும், இரண்டு லட்சம் என்பது மலைப்பான தொகையாக இருந்தது. ரத்னா நடிக்க ஆரம்பித்த நாட்களில் ஆயிரம் இரண்டாயிரமே பெரிய தொகை. அப்புறம் படங்கள் சூடு பிடித்து ரத்னாவுக்காக ஓடுகிறது என்று டிஸ்ட்ரிபியூட்டர்கள் சொல்ல ஆரம்பித்த பிறகு, அவளுடைய ரேட்டை வெகுவாக உயர்த்தினான். ஒருமுறை இந்தியாவிலேயே அதிக ரேட் வாங்கும் குழந்தை நட்சத்திரம் ரத்னா என்றுகூட ஒரு சினிமா பத்திரிகை எழுதியது. ரத்னா நிறைய சம்பாதித்துக் கொடுத்தாள். ஆனால் எல்லாம் வீடு, தோட்டம், நிலம் அப்புறம் ஆடம்பரச் செலவு என்று கரைந்து விட்டதே. வீடு, தோட்டத்தின் பேரில் ஏற்கனவே கடன். பாங்க் பாலன்ஸில் பளிச் சென்று இரண்டு லகரம் இறங்கினால் மாதாந்தர செலவினங்களில் ஏற்படப்போகும் நெருக்கடிகளை யார் சமாளிப்பதாம்?

ரத்னாவுக்கு ஒன்று ஆனது என்றால், மறுநாளே தான் வாங்கியுள்ள கடன்கள் தன்னை திவாலாக்கிவிடும் என்பதை அறியாதவனில்லை சுந்தரம்.

இப்போதைக்கு பணம் புரட்ட ஒரே வழி -

ஆட்டோ குலுங்கி நிற்க, இறங்கி அனுப்பிவிட்டு அந்த ஆபீஸினுள் நுழைந்தான் சுந்தரம்.

"வணக்கம் நாயர் சார்" என்று கும்பிட்டான்.

"வாங்கோ. எங்கே இவ்வளவு தூரம்?" என்று வரவேற்றார் நாயர். தனியாகத்தான் இருந்தார்.

"விஷயமெல்லாம் கேள்விப்பட்டேன். ரொம்ப வருத்தமா இருந்தது. இப்படி ஆகிப்போச்சே. பாவம் நீங்க" என்றார்.

"உங்களுக்கு எப்படி தெரியும்?"

நாயர் மேசையின் கீழிருந்து மூன்று பேப்பர்களை எடுத்துப் போட்டார்.

இதுகள்ல தான் விலாவாரியா எழுதியிருக்கானே! நீங்க எப்படி அந்த மாடிபோர்ஷன் பையனை நம்பி குடிவச்சீங்க? பாருங்க. நம்ம பாப்பாவையே தள்ளிகிட்டு ஓடிட்டான்"

"நாயர் சார்! விஷயம் உண்மையில் அப்படி இல்லை" என்று குரலை இறக்கினான் சுந்தரம்.

நாயர் புரியாமல் பார்த்தார்.

"ஆமாம் சார்! நிஜம்மாவே வேற ஒரு பார்ட்டி தான் ரத்னாவைக் கடத்திட்டுப் போயிட்டாங்க. இப்போ ஒரு மணி நேரம் முன்னால தான் போன் வந்தது. ரத்னா என் கூடப் பேசினா. அந்த மாடி வீட்டுப் பையனை அநாவசியமா பெரிசு பண்ணிட்டாங்க"

"நீங்க என்ன சொல்றீங்க?" என்று வியப்புடன் கேட்டார் நாயர்.

"ம். இன்னும் போலீஸ்ல சொல்லலை. கிட்நாப் பண்ணியிருக்கறது

உறுதியாயிருச்சு. இரண்டு லட்சம் கேட்கறாங்க. போலீஸ்ல சொல்லாமல் நாமே பணம் கொடுத்து மீட்டிடலாம்னு இருக்கேன்."

"அதான் நல்லது சுந்தரம். போலீஸ் எல்லாம் கொஞ்சம் முரட்டு வைத்தியம். நானும் முதல்லயே நினைச்சேன். நீங்க போலீஸுக்குப் போயிருக்க வேணாம்னு தோணிச்சு."

"என்ன பண்றது சார். முதல்ல கையும் ஓடலை காலும் ஓடலை. பளிச்சுனு போய் ரிப்போர்ட் கொடுக்கற மாதிரி ஆயிடுச்சு. இப்போவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. காதும் காதும் வச்ச மாதிரி மீட்டிட வேண்டியது தான்." என்ற சுந்தரம் அசட்டுத்தனமாய் சிரித்தபடி, "இப்போ ரத்னா மீட்கப் படறது உங்க கையில தான் இருக்குன்னு வச்சுக்கோங்களேன்" என்றான்.

நாயர் நெற்றியைச் சுருக்கினார். "நீங்க என்ன சொல்றீங்க? புரியலை" என்றார்.

"இது.. நீங்க கொஞ்சம் பணம் தந்தா..."

"கொஞ்சம்னா?"

"அன்னிக்குப் பேசிட்டிருந்தோமே அதேபடி ரத்னா உங்கபடத்துல தாராளமா நடிக்கட்டும்..."

நாயர் தலையை உறுதியாக ஆட்டினார்.

"சுந்தரம்! அது நல்லாயிருக்காது. நம்ம படத்துக்குத்தான் சொன்னேனே ஒரு இன்னஸன்ட் முகம் உள்ள மாதிரி உள்ள மாதிரி பொண்ணு தான் சரிப் படும்"

"ரத்னா முகம்தான் குழந்தைத் தனமா இருக்குமே"

"ஆனா இமேஜ் போச்சேப்பா"

"நாயர் சார் அப்படிச் சொல்லக்



### குழந்தை வேண்டுமா!

**1954ம்** வருஷம் ஏப்ரல் 7ம் தேதி பிரசவ வார்டில் அந்தக் குழந்தை வீறிட்டு அழுதது. பெற்றோரும் அழுதனர். ஆனந்தக் கண்ணீர் அல்ல. ஆஸ்பத்திரி தரும் பில்லுக்கு எப்படி பணம் கட்டுவது? என்று.

அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். 'குழந்தையையே விற்றுவிடலாம்!' என்ற யோசனை. ஒரு டாக்டரே, 200 டாலருக்கு அந்தக் குழந்தையைக் கேட்டார்.

பெற்றோர், குழந்தையைத் தரும் சமயம், ஒரு நண்பர் குறுக்கிட்டார். "வேண்டாம், விற்காதீர்கள், உங்களுக்கு வயதாகிவிட்டது. இன்னொரு குழந்தை பிறக்கும் என்பது நிச்சயமில்லையே... குழந்தையை விற்காதீர்கள்." என்றார்.

குழந்தையை விற்கவில்லை. பெற்றோரே கஷ்டப்பட்டு அக்குழந்தையை வளர்த்தனர். அந்தக் குழந்தைதான் ஜாக்கிசான்!

-எஸ்.ஜி.

கூடாது"

"ஆனா ஊர் சொல்லிடுச்சே"

சுந்தரத்துக்கு முகத்தில் அடித்த மாதிரி இருந்தது.

"வேணுமானா, ஒரு அஞ்சு வருஷத்துக்கு கான்ட்ராக்ட் மாதிரி உங்க படங்கள்ல மட்டும் நடிக்கற மாதிரி வச்சுக்கலாம் நாயர் சார்"

நாயர் உதடு பிதுக்கினார்.

"இல்லை சுந்தரம். கோவிச்சுக்கக் கூடாது. உங்க பொண்ணு ஓடிப் போச்சுன்னு பேராயிடச்சு. இனிமே அது கவர்ச்சி நடனம் ஆடத்தான் லாயக்கு. அதுக்கும் ஆள் அது இது எல்லாம் வளர்ந்து பெரிசாகணும். இப்போதெல்லாம் ஃப்ரெஷ்ஷா உள்ளே வர்றதுகளே ரெண்டுபடம் தாண்ட தலைகீழா நிக்க வேண்டியிருக்கு. இனிமே உங்க பொண்ணு எங்கே? ம்ஹூம். எனக்கு நம்பிக்கை இல்லை"

"நாயர்!" என்று குரல் உயர்த்தினான் சுந்தரம். "என் பொண்ணு ஓடிப்போகலை. கடத்தப்பட்டிருக்கா. அவ்வளவுதான்"

"சுந்தரம்! வார்த்தை தடிக்குது. வெளியே போன்னு நான் விரட்டறதுக்குள்ள..."

சுந்தரம் வெகுண்டு எழுந்தான். "செக்ஸ்படம் எடுத்து பிழைப்பு ஓட்டிட்ருக்கும் போதே உனக்கு இவ்வளவு திமிர் இருக்கே... நீயெல்லாம்.."

"அதில் நடிக்க மகளைக் கான்ட்ராக்ட் போட வந்த அப்பனுக்கு அதைப்பற்றி பேச தகுதி இல்லை. வெளியே போடா.."

"என்னடா சொன்ன? என்னையா டா போட்டுப் பேசற?"

வார்த்தைகள் மிக வேகமாகத் தடித்தன. சப்தம் கேட்டு வெளி ஆட்கள் வரும்போது நாயரும் சுந்தரமும் கிட்டத்தட்ட கட்டி உருண்டு கொண்டிருந்தனர். அடுத்த சில நிமிடங்களில் சுந்தரம் அள்ளிச் சுருட்டிய குப்பையாக வெளியே வீசப்பட்டான்.




அட்டையில்: 'டைகர்' படத்தில் சிரஞ்சீவி-ரம்பா

எழுந்து உடம்பிலிருந்து மண்ணைத் தட்டிவிட்டு கொண்டான். கண்கள் சிவந்திருந்தன. உடம்பு சுண்டி விட்ட டியூனிஸ் ஃபோர்க் மாதிரி நடுங்கிக் கொண்டிருந்தது. பேச நினைத்தான். அதிகபட்ச ரத்த அழுத்தத்தில் வார்த்தை வெளிவர கஷ்டப்பட்டது.

"டேய் நாயர்! உன்னை உண்டு இல்லைன்னு பண்ணலை, என் பேர் சுந்தரம் இல்லை" என்று சபதம் செய்துவிட்டு நடந்தான்.

# 6



சுந்தரம் அன்று பகலில் நிறைய யோசித்தான் உடலில் ஊமைக்குத்தாக விழுந்திருந்த அடிகள் வலித்தன. தூக்கி எறியப் பட்டதில் கை முட்டு, பாதம் முதலான இடங்கள் உராய்ந்து மேல் தோல் உறிந்து இருந்த இடங்கள் எரிச்சல் தந்தன. சுகுணா இது எப்படி ஆனது என்று கேட்ட போது கீழே விழுந்து விட்டேன் என்று சொல்லிச் சமாளித்திருந்தான். ஆத்திரத்தை வெளியேயும் கொட்ட முடியாமல் இருந்ததால், உள்ளுக்குள்ளேயே பொருமிப் பொருமிப் புரையோடிக் கொண்டிருந்தது.

போன் ஒலித்து அவன் கவனத்தைத் திருப்பியது. எடுத்து "சுந்தரம் ஸ்பீக்கிங்" என்றான்.

"அப்பா... அப்பா..."

ரத்னா.

"என்னைக் காப்பாத்துங்கப்பா. எனக்கு பயம்மா இருக்குப்பா. இவங்கல்லாம் யாருன்னே புரியலைப்பா. ஐயோ..."

"ரத்னா... ரத்னா..." என்று சுந்தரம் அலற மறு முனையில் வேறு குரல் கேட்டது.

"ஹலோ மிஸ்டர் சுந்தரம். பணம் ரெடியா?"

"ஹலோ. ப்ளீஸ். என் மகளை ஒண்ணும் செஞ்சுடாதீங்க. பணம் ரெடி பண்ண கொஞ்சம் டயம் கொடுங்க"

"இது என்ன போலீஸ் ஐடியாவா? லிஸன். அதிகபட்சம் இன்னிக்கு ராத்திரி வரைக்கும் டயம். அதுக்கு மேல ஆச்சுன்னா உன் மகளோட பாடியை எங்கே கலெக்ட் பண்ணணும்னு அடுத்த முறை சொல்றோம்"

மறுமுனை கட் ஆனது.

ஆனந்தராஜ் அந்த ஒலிப்பதிவுகளை மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டார்.

முதலில் ரத்னாவின் குரலை மட்டும் கேட்டுப் பார்த்தார். நிஜமான பயம். அதிர்ச்சி படபடப்பு எல்லாம் இருந்தது. நாடகம் அல்ல. ஒலியின் அளவைக் கூட்டி வைத்து பின்னணியில் ஏதாவது கேட்கிறதா என்று முயன்றார். தெளிவாக எதுவும் இல்லை. நீண்டநேரம் யோசனையில் இருந்தார். பிறகு அதே வாக்கியங்களை வார்த்தை வார்த்தையாகப் பிரித்து யோசித்தார்.

ம்ஹூம். உதட்டைப் பிதுக்கினார்.

எதிரே உட்கார்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்த செல்வா "என்ன சார்?" என்று மெல்லக் கேட்டான், கவனம் திருப்பும் முயற்சியாக.

அவனையே சில விநாடிகள் உற்றுப்பார்த்த ஆனந்தராஜ் "இந்தக் கேஸைப்

பற்றி என்ன நினைக்கிற செல்வா?" என்று கேட்டார்.

"புரியலை சார்"

"இல்லை செல்வா. இது கிளியர் கிட்நாப் கேஸ். ஆனா கடத்தினவன் யாரு?"

"இந்த போன் பண்ணியவன் யாருன்னு தெரிஞ்சாத் தான் கேஸ் முடிஞ்சிடுதே சார்"

"எஸ். இது சரவணனின் குரல் இல்லைன்னு சுந்தரம் சொல்றார். அப்போ சரவணன் எங்கே? அவனைப் பற்றி முழுவதும் விசாரிச்சுட்டேன் செல்வா. ரொம்ப நிதானமா செயல்பட்டிருக்கான். ரத்னாவிடம் நன்கு பழகி அவளுடைய அன்பை நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்றிருக்கிறான். வேலையை ராஜினாமா பண்ணியிருக்கிறான். நான் ஏன் ராஜினாமா செஞ்சேன்னு சீக்கிரமே தெரிஞ்சுக்குவீங்கன்னு ஆபீஸ்ல சொல்லியிருக்கிறான். வீட்டைக் காலிபண்ணியிருக்கிறான். எல்லாச் சில்லறைக் கடன்கள், டீக்கடை, லாண்டரிக்கடை, மெஸ் எல்லாவற்றிலும் கணக்குத் தீர்த்திருக்கின்றான். பளிச்சென்று புகையாக மறைந்து விட்டான். அவன் காணாமல் போனதும் ரத்னா கடத்தப்பட்டதும் மிஸர் கோயின்சிடன்ஸா அல்லது கடத்தினதே அவன் தானா? புரியவில்லை"

"சரவணனும் இன்னொருவனும் சேர்ந்து திட்டமிட்டிருக்கலாமா?"

"பாஸிபிள். ஆனால் நான் விசாரித்தவரையில் அவன் ஓர் அநாதை. நெருங்கிய நண்பர்கள் என்று யாருமே இல்லாதவன்."

"இவன் ஸோலோவாகவே செய்து போனில் குரல் மாற்றிப் பேசினால்?"

"அதற்கு அவசியமே இல்லையே. இவன் சொல்லியிருந்தால் ரத்னாவே வீட்டில் இருந்து எதை வேண்டுமானாலும் எடுத்துத் தந்திருப்பாள் என்று தானே சுந்தரமும் சுகுணாவும் சொல்கிறார்கள்?"

"ஏன் சார், இப்படி இருக்கலாமே! ரத்னாவை என்ன காரணத்துக்காகவோ தள்ளிக் கொண்டு போக, அவளுடைய ஒத்துழைப்புடனேயே இவன் திட்டம் போட்டு அவளை ஸ்கூல் வாசலில் நிற்கச் சொல்லியிருக்க, இன்னொரு பார்ட்டி அவளைக் கடத்தியிருக்கலாம் இல்லையா?"

"சரவணனுடைய பிளானையும் செயல்களையும் ரத்னாவின் மூவ்மென்ட்ஸையும் நெருக்கமா வாட்ச் பண்ணிட்டிருந்த ஒருத்தனால் தான் இது முடியும். இருந்தாலும் இப்படி ஒரு பாஸிபிலிட்டி இருப்பதை மறுப்பதற்கில்லை."

"இப்போ என்ன ஐடியா பண்ணியிருக்கீங்க?"

"அடுத்த போன் அல்லது கடிதம் வரும். பணம் தரச் சம்மதிக்கும்படி சுந்தரத்திடம் சொல்லியிருக்கிறேன். பணத்தை அந்தப் பார்ட்டி எப்படி வாங்கப் போகிறது என்பதை வைத்துத் தான் நம்ம மாடஸ் ஆபரண்டியைத் தீர்மானிக்க முடியும். ஏன்னா எதிராளி விவரம் தெரிஞ்ச பார்ட்டி. பத்திலிருந்து இருபது செகண்ட்களுக்கு மேல போனில் பேசுவதே இல்லை..."

ஆனந்தராஜ் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார்.

"சார்! இன்னொரு விஷயம்"

"என்ன?"

"நீங்க சொன்னபடியே சுந்தரத்தை நாலு நாளா வாட்ச் பண்றோம்.." என்று தொடங்கி நாயருடன் அவன் போட்ட சண்டை, சபதம் பற்றி விவரித்தான் செல்வா.

"லீவ் இட்" என்று அலட்சியப்படுத்தினார் ஆனந்தராஜ்.

"ஓகே. நான் கொஞ்சம் வீடு வரைக்கும் போயிட்டு வந்திர்றேன் செல்வா. என் பொண்ணு இன்னிக்கு ஆல் இண்டியா டூர் கிளம்பறா. சென்ட் ஆஃப் பண்ணிட்டு வந்திடறேன்"

ஆனந்தராஜ் வீட்டினுள் நுழைந்தபோது வீடு ஜே ஜே என்றிருந்தது. ஏழெட்டு பெண்கள் வந்திருந்தனர். எல்லோரும் அனிதாவின் க்ளாஸ்மேட்ஸ். எல்லோரையும் அவருக்கு முன்பே தெரியும். அனிதா அந்த க்ரூப்புக்கே ரிங்லீடர் மாதிரி. அவளுடைய பிறந்தநாளானாலும் சரி ,அவர்களில் யாருடைய பிறந்த நாளானாலும் சரி, கொண்டாட்டம் கும்மாளம் எல்லாம் இங்கு தான் பெரும்பாலும் இருக்கும்.

"அனிதா! அங்கிள் வந்தாச்சு. கரெக்டா சொன்னபடியே வந்திட்டீங்களே" என்று அவர்கள் கத்த "என்னம்மா பண்றது. ஊரையெல்லாம் நான் விரட்டிட்டிருக்கேன். அந்தப் பாவத்துக்கு இவளும் இவ அம்மாவும் என்னைப் படுத்தற பாடு..." என்று போலியாக அலுத்துக் கொண்டே ஹாலில் இருந்த ஒற்றை சோபாவில் தொப்பென்று உட்கார்ந்தார்.

வீடியோ ஓடிக் கொண்டிருந்தது. யாரும் பார்க்கிற மாதிரி தெரியவில்லை. இருந்தாலும் அது ஒரு பக்கம் சப்தம் போட்டுக் கொண்டிருந்தது.

"டாடி..." என்றபடியே வந்தாள் அனிதா. "இந்த டிரஸ் எப்படி இருக்கு?"

"நீங்க எல்லாரும் டூர் கிளம்பறதாத்தானே சொன்னீங்க. எதோ ஃபேன்ஸி டிரஸ் காம்படிஷனுக்குக் கிளம்பற மாதிரில்ல தெரியுது" என்று சிரித்து அவளைச் சிணுங்க வைத்தார்.

"அம்மாவைக் கூப்பிடு. இவங்களுக்கெல்லாம் டிபன் கொடுத்தாளா?"

"உங்களுக்கு வேணும்னு கேளுங்களேன்" என்று சிரித்த இரண்டொரு பெண்கள். "ஆன்ட்டி! அங்கிளுக்கு உங்களைத் தேடுது போல. டிபன் கேட்கற சாக்கில கூப்பிடறார்.."

"அட ஏம்மா உங்க முன்னால அவளைத் தேடணும்! ஒரே பொண்ணை ஆல் இண்டியா டூர் அனுப்பறதே ஒய்ஃப் கூட ஜாலியா இருக்கலாம்னு தானே!"

எல்லோர் சிரிப்பையும் மீறிய "வீல்" என்ற குரல் ஹாலை ஒரு கணம் அமைதியாக்கியது.

டி.வி.யில் இருந்து.

ரத்னா.

"என்ன படம்? யாரும் பார்க்கிறீங்களா என்ன?

"அங்கிள்! நான் பார்த்திட்டிருக்கேன்" என்றது ஒரு சல்வார் கம்மீஸ்

"என்ன படம்?"

"பூங்காற்று புதிரானது. ரத்னா நடிச்சது"

"ஆமா! அந்தப் பொண்ணு என்னப்பா ஆச்சு? பேப்பர்ல கன்னா பின்னான்னு எழுதறானே"

"ஆமா அங்கிள்! ரத்னாவைக் கண்டு பிடிச்சிடுவீங்களா?"

"இவர் கிழிச்சார்" என்றபடியே வந்த அனிதாவின் அம்மா டிபன் தட்டை நீட்டினாள்

அதைக்கூட கவனிக்காமல் டிவி ஸ்கிரீனை வெறித்துக் கொண்டிருந்தார் ஆனந்தராஜ்.

ஓ! மை காட்!

"கொஞ்சம் ரீவைன்ட் பண்ணும்மா" என்றார் அமானுஷ்யமான குரலில் கட்டளையாக.

அடுத்த அரைமணி நேரத்தில் சுந்தரத்தின் வீட்டில் இருந்தார். சுந்தரம் அவரையே புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க எதிரே அமர்ந்திருந்த சுகுணாவின் முகத்தில் வாட்டம் தெரிந்தது. போனவாரம் வரை இருந்த அலங்காரப் பூச்சுகள், எதிராளியின் கவனத்தைச் சுண்டியிழுக்க முயற்சிக்கும் ஒப்பனைகளில் பாதி குறைந்திருந்தது. கண்களில் நிஜமான சோகம் கடை விரித்திருந்தது.

"நீங்க சொல்றது புரியலை இன்ஸ்பெக்டர்"

"வேறு ஒண்ணும் செய்ய வேண்டாம். எப்படியும் இன்னொருமுறை போன் வரும். அதனை நீங்க அட்டென்ட் பண்ண வேண்டாம். மிஸஸ் சுகுணா அட்டென்ட் பண்ணட்டும்"

"ஏன்?"

"ஒரு சின்ன டெஸ்ட்"

சுகுணா லேசான படபடப்புடன் கேட்டாள்.

"நான் போனை எடுத்து என்ன சொல்லணும்?"

"உங்க கணவர் பணம் கொடுக்கத் தயாரில்லை. அவர் போலீஸிடம் போகிறார். அவருக்குத் தெரியாமல் ரத்னாவுக்காக நீங்க பணம் கொடுக்க ரெடின்னும் சொல்லுங்க. ஆனா அதுக்கு ஒரு கண்டிஷன்னு சொல்லுங்க"

"என்ன கண்டிஷன்?"

ஆனந்தராஜ் சொன்னார். ஏன் அப்படிச் சொல்லச் சொல்கிறார் என்று இருவருக்கும் புரியவில்லை. இருந்தாலும் போலீஸ்! கேட்டுத் தானே ஆகவேண்டும்.

நீண்ட நேரம் காத்திருந்தும் போன் வராததால், ஆனந்தராஜ் கிளம்பிப் போனார்.

போன் இரவில் வந்தது.

சுகுணா எடுத்தாள்

"சுந்தரத்திடம் கொடு" என்றது மறுமுனை.

"அவர் வீட்டில் இல்லை. இன்னொரு விஷயம் அவர் உங்களுக்குப் பணம் தரத் தயாரில்லை..." என்று தொடங்கி ஆனந்தராஜ் சொல்லிக் கொடுத்தவைகளைச் சொன்னாள். கூடவே "ரத்னாவைப் பேசச் சொல்லுங்கள் ப்ளீஸ்... என்றாள் கெஞ்சும் குரலில்.

மறுமுனையில் சில விநாடிகள் மௌனம். பிறகு "ம்ஹூம்! உன் வார்த்தைகளில் போலீஸ் வாடை அடிக்கிறது. இனிமேலும் நாங்க பேரம் பேச ரெடியில்லை. உங்க ரத்னாவுடைய பிணத்தை நாளை மாலை கடற்கரையில் கலெக்ட் பண்ணிக்கோ" என்ற தீர்மானமான பதிலுடன் மறுமுனை கட்டானது.

"நோ" என்று அலறினாள் சுகுணா.

# 7



நடிகர் சங்கத் தலைவர் பாலகணபதி கிட்டத்தட்ட ஃபீல்டில் ரிடையர்ட் ஆகி விட்டவர். நாற்பது வருடங்களுக்கும் அதிகமாக நடித்தாகி விட்டது. இருந்தும், விட மனமில்லாமல் தன்னுடைய வயதுக்கும் அனுபவத்துக்கும் சம்பந்தமில்லாமல் துணை நடிகை துணிவிலகிப் படுத்திருக்கும் கோலத்தை சாவித்துவாரம் வழியே பார்ப்பது போன்ற நகைச்சுவை(?)க் காட்சிகளில் நடித்து வந்தார். இரண்டு பெரிய நடிகர்களுக்கிடையேயான சண்டையில், எதிர்பாராத விதமாக நடிகர் சங்கத் தலைவராகி விட்டார். முதலில் அந்தப் பதவியை திட்டக் கமிஷன் துணைத் தலைவர் பதவி போல் நினைத்தார். அப்புறம் தான் தெரிந்தது சங்கத்துக்கு சந்தா கூட சரிவர வசூல் ஆவதில்லை என்று. இந்த லட்சணத்தில் சங்கத்திற்கு கடன் வேறு கோடிக் கணக்கில் இருந்தது. வேலைவெட்டி இல்லாததால், சந்தா வசூலிக்க ஆரம்பித்து நிறைய அவமானங்கள் பட்டார். சும்மா மூன்று நான்கு படங்களில் தலைகாட்டிய சிறிய நடிகர்களிடம் மட்டுமே வசூல் ஆனது. பெரிய நடிகர்களிடம் தரிசனமே பெரிய விஷயமாய் இருந்தது. எனவே, அதனையும் விட்டுவிட்டு பேசாமல் சங்கத்துக்கு என்று இருந்த வாடகை தராத கட்டிடத்துக்கு வருவதும், கிடைத்தவர்களிடம் அரட்டை அடிப்பதும் வீட்டுக்குத் திரும்புவதுமாக இருக்க ஆரம்பித்தார்.

சங்கத் தலைவருக்கு சங்கத்தில் தான் மரியாதை இல்லையே தவிர வெளியே நிறைய இருந்தது. சினிமா விழாக்களுக்குக் கூப்பிட்டு தவறாமல் பொன்னாடை போர்த்தினார்கள். அரசியல் வாதிகள், மந்திரிகள் வானளாவப் புகழ்ந்தார்கள். கலைமாமணி பட்டம் தந்தார்கள். புது நடிகைகள் மேடைகளில் காலில் விழுந்து வணங்கினார்கள்.

அவ்வப்போது எதாவது சிறுசிறு பிரச்னைகள் வரும்போத மத்யஸ்தத்துக்கு அழைத்தார்கள். ஸ்டன்ட் நடிகர் ஒருவர் துணை நடிகையைக் கற்பழிக்க முயன்றதாகப் பிரச்னை வந்தபோது இவர் தலையிட்டு சுமுகமாகத் தீர்த்து வைத்ததில், கொஞ்சம் பெயர் வந்தது. தேர்தல் காலங்களில் கொஞ்சம் அதிக கவனிப்பு இருந்தது.

போலீஸ், ரத்னா விஷயத்தில் அலட்சியமாக இருப்பதாகப் பட்டவுடன் சுந்தரம் பாலகணபதியிடம் முறையிடுவது என்று முடிவு செய்தான்.

"அவங்க பாட்டுக்கு அலட்சியமா சொல்லிட்டுப் போயிட்டாங்க ஐயா. இன்னிக்கு சாயங்காலம் கடற்கரையில் பிணம் மிதக்கும் எடுத்துக்கோன்னு கடத்தல் காரன் சொல்லிட்டான். நான் என்ன ஐயா செய்வேன்?" என்று புலம்பாத குறையாக சுந்தரம் சொன்ன போது பால கணபதிக்கு ரத்தம் சுட ஆரம்பித்தது.

"அதன்பிறகு போலீஸுக்குச் சொன்னீங்களா?"

"ஆனந்த ராஜை நேரில் பார்க்கறதுக்கே முயற்சி பண்ணினேன். அகப்படலை ஐயா."

"என்ன அலட்சியம்!"

"சினிமாக் காரங்கன்னா அவ்வளவு இளக்காரம். ரத்னா பேபி ஆர்ட்டிஸ்ட் தானேங்கற அலட்சியமா? இதே ஒரு பெரிய ஆர்ட்டிஸ்ட்னா..." என்று சுந்தரம் மீண்டும் புலம்ப ஆரம்பித்தான்.

பாலகணபதிக்குக் கோபம் வந்தது.

"அப்படிச் சொல்லாதீங்க சுந்தரம்! கலைச் சேவைன்னு வந்த பின்னால் பெரிய ஆர்ட்டிஸ்ட் சின்ன ஆர்ட்டிஸ்ட்னு வித்தியாசம் கிடையாது. ரத்னாவும் நம்ம குடும்பத்துப் பொண்ணு. நீங்க கவலைப் படாதீங்க.

மொத்த நடிகர் சங்கமும் உங்க பின்னால இருக்குது..." என்றார் தைரியம் அளிக்கும் குரலில். பிறகு, போனை எடுத்தார் படபடவென்று நம்பர்களைச் சுழற்றினார்.

"ம்... நான் நடிகர் சங்கத் தலைவர் பாலகணபதி பேசறேன்... மந்திரி ஐயா இருக்காங்களா... கொஞ்சம் கொடுங்க... வணக்கம் ஐயா... ம். பாலகணபதி தான்... நல்லா இருக்கேன். இது... நம்ம பேபி ரத்னா விஷயமா... ஆங் காணாமப் போச்சுதே... அந்த கேஸ்ல போலீஸ் கொஞ்சம் அசட்டையா இருக்கறதா ரத்னாவோட அப்பா கம்ப்ளெய்ண்ட் பண்றார்.. ஆங்.. நேரில் வரட்டுமா? நல்லது. அவரையும் கூட்டிட்டே வர்றேன். விவரமா சொல்ல வசதி. இதோ உடனே வர்றோம்..." என்று போனை வைத்தார்.

"எழுந்திருங்க சுந்தரம். மந்திரி உடனே வரச் சொல்றார்."

அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டான் சுந்தரம். "ஐயா! நீங்க தெய்வம் மாதிரி. ரத்னா இப்பவே கிடைச்சிட்ட மாதிரி இருக்குது."

"அட என்னப்பா. பெரியவார்த்தை எல்லாம் சாதாரண விஷயம் தான். என்ன, நீங்க முதல்லயே நம்ம கிட்ட வந்திருக்கலாம்..."

கமிஷனர் அறையில் விறைப்பாக நின்றிருந்தார் ஆனந்த ராஜ். கமிஷனர் இளந் தொப்பையை பெல்ட்டினால் இறுக்கி இருந்தார். லேசான கோபத்தில் இருப்பது தெரிந்தது. கைகளைப் பின்னால் கட்டியபடி ஆனந்த ராஜுக்கு முதுகு காட்டிக் கொண்டிருந்தார்.

"என்ன பண்ணினீங்க ஆனந்த ராஜ்? இன்னிக்கு சாயங்காலம் கடற்கரையில் பிணம் கிடைக்கும்னு சொல்லியிருக்கானாமே"

"ஒண்ணும் ஆகப் போறதில்லை சார். அந்த டெலிபோன் ஆசாமியைப் பிடிச்சாச்சு"

"இஸிட்?" என்று திரும்பினார்." எப்போ?"

"நேத்து ராத்திரி அவன் போன் பண்ணினப்பவே"

"குட்! தென் ரத்னா?"

"இவன் ரத்னாவைக் கடத்தலை"

"புரியலை"

"சார். அவனை எல்லா டிகிரிலயும் விசாரிச்சாச்சு. என் சந்தேகம் சரிதான். ஆக்சுவலா ரத்னாவை இவன் கடத்தலை. ரத்னாவைக் காணோம்ங்கற பத்திரிகை செய்தியை வைத்து லாபம் அடையப் பார்த்திருக்கான். அவ்வளவுதான்."

"தனி ஆளா, க்ரூப்பா?"

"தனி ஆள் தான் சார். வேலை வெட்டி இல்லை. மூளை இப்படிக் குறுக்கா வேலை செஞ்சிருக்கு"

"பட், போனில் ரத்னா பேசினது.. அழுதது..."

"எல்லாம் ரத்னாவுடைய குரல் தான் சார். ஆனால் டேப் பண்ணியது. ரத்னா நடிச்ச ஒரு படத்துல அவள் கடத்தப்பட்ட காட்சி வருது. அப்போ



### நிர்வாண உண்மை!

மனோதத்துவ டாக்டர் தன் அறையில் அமர்ந்து 'மனமும், உடலும்' என்ற புத்தகத்தையும், 'ஆள் பாதி, ஆடை பாதி' என்ற புத்தகத்தையும் எழுதிக் கொண்டிருந்தார்.

உள்ளே நுழைந்தார் ஒருவர். சுற்று முற்றும் பார்த்தார், நாற்காலியில் அமர்ந்தார்.

"டாக்டர்...இப்போ வர்ற மாகஸீன்களிலே, முக்கியமா வெளிநாட்டுப் பத்திரிகைகளில் நிறைய நிர்வாணப் படங்கள் வருகின்றன. அவைகளைப் பார்த்தவுடன் எனக்கு ஒரே ஷாக்...அதிர்ச்சி ஏற்படுகிறது..."

"ஓ!...நீங்கள் ரொம்ப... ரொம்ப வைதீக மனப்பான்மை உடையவரா?" என்று தயங்கிய வாறு கேட்டார்.

அவர் சொன்னார் "நோ, நோ, நாட் அட் ஆல். நான் ரெடிமேட் உடைகள் விற்கும் கடை வைத்திருக்கிறேன்!" இப்போது டாக்டருக்கு அதிர்ச்சி!

-எஸ்.ஜி.

அவள் பேசின வசனம். அதனால்தான் ஒரே வாக்கியம் அட்சரம் பிசகாமல் ஏற்ற இறக்கம் மாறாமல் இருந்தது. அதனைக் கன்ஃபர்ம் பண்ணத்தான் ரத்னாவுடைய அம்மாவை ஃபோன் அட்டெண்ட் பண்ணச் சொன்னேன். ஏன்னா படத்துல வசனம் அவள் அப்பாவிடம் பேசறமாதிரிதான். உண்மையிலேயே எதிர் முனையில் ரத்னா இருந்தா அவள் அம்மாவிடம் பேசட்டுமே என்று முயற்சி பண்ணினேன். அதோடு இந்த முறை பேச்சும் கொஞ்சநேரம் நீடிச்சதுனால டிரேஸ் பண்ணி அவனைப் பிடிக்கவும் முடிஞ்சது"

"குட். யூ டிட் எ குட் ஜாப். ஆனால் விஷயத்தைப் பத்திரிகைக்குச் சொல்லாமல் மறைத்து வைப்பானேன். பாருங்க அந்த ஆள் நடிகர் சங்கம் மூலமா மந்திரிவரை போயிட்டான். அவர் கூப்பிட்டுக் கேட்கறார். அவங்க ஏதோ உண்ணாவிரதம் ஊர்வலம்னு மிரட்டறாங்களாம். பெரிய இஷ்யூ ஆக்கிடப் போறங்க..."

"எல்லாம் இன்னிக்கு சாயங்காலம் ரத்னாவுடைய பிணம் கிடைக்கும்னு போன் வந்ததால் வந்த வினை. அப்படி ஒண்ணு நடக்கவே போறதில்லைன்னு ஆயிட்டாலே இந்த சீரியஸ்னெஸ் போயிடும். நம்ம கவனம் இன்னும் அந்த போன் ஆசாமியிடம் தான் இருக்குதுன்னு நிஜக் குற்றவாளி நினைச்சிட்டிருக்கறது நமக்கு நல்லது. அவன் கொஞ்சம் அலட்சியமா இருப்பான் இல்லியா?"

"ஏதாவது க்ளூ கிடைச்சிருக்கா?"

"முக்கியமான க்ளூ கிடைச்சிருக்கு சார். மெயினா அதுக்காகத் தான் உங்களைப் பார்க்கவே வந்தேன்."

"சொல்லுங்க"

"ரத்னா வீட்டு மாடி போர்ஷன் சரவணன், அவளுக்கு நிறைய கிப்ட்ஸ் கொடுத்திட்டே இருப்பான்னு சொன்னாங்க. அவன் கொடுத்த ஒரு டிராயிங் நோட்ல முருகப்பா ஸ்டேஷனரிஸ் பில் இருந்தது. அவன் காணாமல் போவதற்கு இரண்டு நாள் முன்பு வாங்கியது. அந்தக் கடைல விசாரிச்சப்போ கடைப் பையன் ஒரு விஷயம் சொன்னான்.

அவன் அடிக்கடி அங்கே தான் வாங்குவானாம். அன்னிக்கு அந்த நோட்டு உட்பட பல டிராயிங் உபகரணங்களும் வாங்கியிருக்கான். ரத்னாவுடைய ஸ்கூல் பேக்ல காணாமல் போன அன்னிக்கு புக்ஸுக்கு பதிலா இவை தான் இருந்ததுன்னு அவள் பிரண்ட் மேரி சொன்னா. அந்த ஐட்டங்கள் வாங்கிட்டு பணம் கொடுக்கும் போது சட்டைப் பையில் இருந்து ஒரு ரிஸர்வேஷன் டிரெயின் டிக்கெட் கீழே விழுந்ததாம். கடைப்பையன் தான் எடுத்து சரவணனிடம் கொடுத்தானாம். எங்கே சார் ஊருக்கான்னு கேட்டிருக்கான். ஆமாப்பா வடக்கே எங்கேயாவது போயிடலாமான்னு யோசனைன்னு சொல்லிட்டு நாக்கைக் கடிச்சிட்டு சிரிச்சானாம். அப்புறம் சொந்த ஊருக்குப் போறேம்ப்பான்னு சொன்னானாம்.."

கமிஷனர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"அப்புறம்?"

"நேரே ரெயில்வே டிபார்ட்மென்ட்டைப் பிடித்தேன். ரிஸர்வேஷன் சார்ட்டை ஒவ்வொரு டிரெயினுக்கும் பார்த்தேன். ரத்னா காணாமல் போன

அன்னிக்கு காலை ஒன்பதரைமணி நவஜீவன் எக்ஸ்ப்ரஸில் நெடுஞ்சேரலாதன், குழல்வாய்மொழின்னு இரண்டு பேர் பயணம் செய்திருக்காங்க. அது இவங்க இரண்டுபேரா இருக்கலாம்னு நினைக்கிறேன்."

"எப்படி?"

"நம்பர் ஒன் அந்தப் பெயர்கள். ரொம்ப வித்தியாசமா இருந்தது. வயதுகள் ஒத்துப் போகின்றன. ஒன்றாக புக் செய்யப்பட்டிருந்த ரெட்டை டிக்கெட்டுகள் இந்த வயசு ரேஞ்சில் இருந்ததே எல்லா டிரெயினும் சேர்த்து எட்டு கேஸ் தான். இது ஒண்ணு தான் பொய் அட்ரஸ்"

"அந்தப் பயணம் கன்பர்ம் ஆகியிருக்கா?"

"செக் பண்ணிட்டேன் சார். அந்த ரெண்டு பேரும் போயிருக்காங்க. இனிமே அகமதாபாத் கான்டாக்ட் பண்ணி..." என்று தொடங்கி தன்னுடைய அடுத்த கட்டத் திட்டங்களை விவரித்தார் ஆனந்தராஜ்.

"வெரிகுட்! பிரில்லியன்ட்! கேரி ஆன்" என்று கைகுலுக்கி ஊக்கினார் கமிஷனர்.

ஆனந்தராஜ் வெளியேறினார் வேகமாக.

அடுத்த நான்காம் நாள் காலைப் பத்திரிகைகள். ரத்னா மீட்கப்பட்ட செய்தியைத் தலைப்பில் கொண்டு வெளிவந்து பரபரப்பாக விற்பனை ஆயின.

# 8



பத்திரிகைகள் ரத்னாவைச் சந்திக்க மிகுந்த முயற்சி செய்தன. ரத்னாவையும் சரவணனையும் சென்னைக்குக் கூட்டி வந்த அன்றே போலீஸ் கமிஷனர், நடிகர் சங்கத் தலைவர் பாலகணபதி, சுந்தரம், சுகுணா எல்லோரும் கூடிப் பேசி ரத்னா வீட்டுக்கு அனுப்பப்பட்டாள். வழக்கு தொடரப் பட்டுள்ளதாகவும், ரத்னாவின் மனநிலை உடல்நிலை இரண்டுமே அப்செட் ஆகி உள்ளதால் ஒய்வு தேவைப்படுகிறது என்றும் சொல்லி மருத்துவ ஒய்வு தேவைப்படுகிறது என்றும் சொல்லி மருத்துவ உதவியுடன் ரத்னா வீட்டினுள் அடைக்கப்பட்டாள். அவள் யாரையும் சந்திப்பதோ பேட்டி கொடுப்பதோ கூடாது என்று போலீஸ் மறுத்திருப்பதாகச் சொல்லப்பட்டது.

போலீஸ் பிராஸிக்யூஷன் தரப்புக்குத் தயாராக இரண்டு நாட்கள் எடுத்துக் கொண்டதால் மூன்றாம் நாள் வழக்கு விசாரணைக்கு வந்தது.

கோர்ட்டில் ஜே ஜே என்று கூட்டம்.

சரவணன் இறுகிய முகத்துடனும் ஆறுநாள் தாடியுடனும் குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்தான். உள்ளங்கை வியர்த்துக் கொண்டே இருந்தது. எதிரே இருந்த சாட்சிக் கூண்டு காலியாக இருந்தது. குறைந்தது ஆயிரம் ஜோடிக்

 கண்களாவது தன்னையே மொய்ப்பது போன்ற உணர்வு தாக்கியது.

கண்ணாடியைக் கழற்றி விட்டு அவனைப் பார்த்த நீதிபதியின் கண்களில் கூட லேசான வெறுப்பு இருப்பதாகத் தோன்றியது. பிராஸிக்யூட்டர் தன் கனத்த உடம்பைத் தூக்கிக் கொண்டு முன்னால் வந்து, வேகமாகப் பேசிக் கொண்டிருந்தார். சரவணனின் கவனம் வேறு எங்கோ இருந்ததில் அவர் என்ன பேசிக் கொண்டிருக்கிறார் என்பது காதில் விழவில்லை. ஏதோ ஒரு கணத்தில் ரத்னா வந்திருக்கிறாளா என்ற எண்ணம் எழ பார்வையாளர் மத்தியில் ஒரு முறை பார்வையை மேய விட்டு அவள் இல்லை என்று தெரிந்து கொண்டான்.

"ஒரு நிமிடம்" என்று நீதிபதி சொன்னது போல் இருந்தது.

பிராஸிக்யூட்டர் பேச்சை நிறுத்தினார்.

"டிஃபன்ஸ் தரப்புக்கு வக்கீல் இல்லையா?"

"இல்லை யுவர் ஆனர்"

"குற்றவாளி விரும்பினால் கோர்ட் ஏற்பாடு செய்யும்"

சரவணன் மௌனமாக இருக்க நீதிபதி அவன் கவனத்தை இழுத்துக் கேட்டார்.

அவன் மறுத்தான்.

கோர்ட்டில் லேசான சலசலப்பு எழ "ஆர்டர், ஆர்டர்"

"ஏன்?"

"என்மீது சொல்லப்பட்டிருக்கும் அத்தனை குற்றங்களையும் ஒப்புக் கொள்வதாகக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறேன்..."

"அந்த ஒப்புதல் வாக்குமூலம் நீயாகவே கொடுத்ததா அல்லது ஃபோர்ஸ் பண்ணி வாங்கப்பட்டதா என்று தெரிய வேண்டும்."

ராஸ்கல் என்று ஆனந்தராஜ் ஓங்கிக் கன்னத்தில் அறைய தான் சுருண்டு விழுந்தது ஞாபகம் வந்தது. கையெடுத்துக் கும்பிட்டான். "ஐயா! அடிக்காதீங்க. என்னென்ன சொல்றீங்களோ அத்தனையையும் ஒப்புக்கறேன். எதெதுல கையெழுத்துப் போடணுமோ போடறேன். அடிக்காதீங்க வலி தாங்க மாட்டேன்"

தன் கேள்விக்கு பதில் சொல்லாத அவனுடைய மௌனம் நீதிபதியை என்னவோ செய்தது. பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் பக்கம் திரும்பி "ப்ரொஸீட்" என்றார்.

"பெயர்?"

"சரவணன். கே. சரவணன். கே ஸ்டான்ட்ஸ் ஃபார் கஸ்தூரிபா ஆசிரமம்"

"பெற்றோர்?"

"கிடையாது. தெரியாது. விவரம் தெரிந்ததில் இருந்தே அந்த அனாதை ஆசிரமத்தில் தான் வளர்ந்தேன்."

பிராஸிக்யூட்டர் நீதிபதியை நோக்கினார்.

"நல்லா படிப்பானாம் யுவர் ஆனர். நீங்க அவசியம்னு நினைத்தால் அந்த

ஆசிரமத்தின் மேலாளர் சாட்சியாக வரத்தயார். படிப்பு முடிஞ்சு வேலை கிடைத்து அவருடைய ஆசீர்வாதத்துடன் வெளியேறி இருக்கிறான். முதலில் கொஞ்சநாட்கள் லாட்ஜ்களில் மாத வாடகைக்குக் குடியிருந்திருக்கிறான். அதன் பிறகு ரத்னா வீட்டு மாடி போர்ஷனுக்குக் குடி வந்திருக்கிறான். ஏதோ நீண்டகாலத்திட்டத்துடன், வந்ததிலிருந்தே அவளுடன் நன்றாகப் பேசிப் பழகி அவளுடைய அன்பை அபிமானத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்து கிட்டத்தட்ட அதில் வெற்றியும் பெற்றிருக்கிறான்."

நீதிபதி சரவணனின் முகத்தைப் பார்க்க அது இறுகி இருந்தது.

"சந்தர்ப்பம் பார்த்து வேலையை ரிஸைன் பண்ணிவிட்டு ரத்னாவையும் ஏமாற்றி குஜராத்துக்குக் கடத்திச் சென்று விட்டான்"

"மோடிவ்?"

"அவனுக்கே உறுதியான திட்டம் இல்லை.

அவளைக் கடத்திச் சென்றதை வைத்து பிளாக் மெயிலாக பணம் பண்ண பயமாக இருந்திருக்கிறது. எப்படியும் மாட்டிக் கொள்வோம் என்று பயந்திருக்கிறான். எனவே, ரத்னா காணாமல் போன சூடு ஆறட்டும் என்று ஒரு மாதம் இரண்டு மாதம் வரைக் காத்திருக்கத் திட்டம் போட்டிருக்கிறான். அதுவரை அவளுக்கு சந்தேகம் வந்து விடாமல் இருக்க அகமதாபாத்தில் ஒவ்வொரு இடமாகக் கூட்டிப் போவது, சினிமா, பிக்னிக்..." பிராஸிக்யூட்டர் நீதிபதியின் முகத்தில் அதிருப்தியை அப்பட்டமாகப் பார்த்தார். "ரத்னாவை எதாவது பாம்பே பார்ட்டிக்கு விபசார விடுதிக்கு விற்று விட திட்டம் போட்டிருக்கிறான். இப்போதெல்லாம் வயதுக்கு வராத இளம் பெண்களுக்கு ரொம்ப கிராக்கியாம். நல்ல விலை போகிறார்களாம்..." என்றார் முத்தாய்ப்பாக.

கூட்டம் சலசலக்க ஆரம்பித்தது.

ஆர்டர்! ஆர்டர்!

"இவனுக்கு மைனர் பெண்ணை ஏமாற்றி கடத்தியதற்காக, இத்தனை நாட்கள் ஒளித்து வைத்திருந்ததற்காக, அடல்ட்ரி முயற்சிக்காக, அவளை விற்க முயன்றதற்காக என்று எல்லா செக்ஷன்களிலும் தண்டிக்க வேண்டுகிறேன். நீதிபதி அவர்களே! இந்தக்



நாவலாக இருக்கிறதே!

அரசியல் தலைவர்கள், இசை வல்லுநர்கள், டாக்டர்கள் பெயரால் தெருவின் பெயர்கள் அமைத்திருப்பதைக் கண்டிருக்கிறோம்.

கல்கத்தாவில் ஒரு தெருவின் பெயர் சுவர்ணலதா. அது ஒரு நாவலின் பெயர்! 19ம் நூற்றாண்டில் தாராநாத் காங்கூலி என்பவர் எழுதிய புகழ் பெற்ற நாவல் சுவர்ணலதா.

-பாமா

குற்றங்களை இவன் ஒப்புக் கொண்டது மனம் திருந்தி அல்ல. கையும் மெய்யுமாகப் பிடிபட்டுவிட்ட பயத்தினால் தான். குற்றங்களை ஒப்புக் கொண்டால் ஒருவேளை தண்டனை குறைக்கப் படலாம் என்ற நப்பாசையில் தான். இப்படிப்பட்ட கோல்ட் பிளைட் கிரிமினல்கள் வலுவாகத் தண்டிக்கப் படவேண்டும்." என்று நீண்ட வசனம் பேசி வணங்கி விட்டு மூச்சிறைக்க தன் சீட்டில் அமர்ந்தார்.

நீதிபதி சில விநாடிகள் மௌனம் சாதித்து விட்டு சரவணனைப் பார்த்தார்.

"நீ எதாவது சொல்ல விரும்புகிறாயா?" என்று கேட்டார் இதமாக.

சரவணன் நிமிர்ந்தான். அவனுடைய விழிகள் சிவந்திருந்தன.

"ரத்னா ஏன் வரலை?" என்று கேட்டான்.

பிராஸிக்யூட்டர் எழுந்து "நீதிபதி அவர்களே! தான் கடத்தப்பட்ட செய்தி அறிந்தது முதல் ரத்னா கொஞ்சம் அப்செட் ஆனதில் காய்ச்சல் வந்து வீட்டில் டிரீட்மென்ட்டில் இருக்கிறாள். மெடிகல் சர்டிபிகேட் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது" என்று கூறி அமர்ந்தார்.

"வேறு என்ன சொல்ல விரும்புகிறாய்?"

"ரத்னா மட்டும் வந்து இவர் சொன்னதெல்லாம் உண்மையான்னு சொல்லட்டும். அதுக்கப்புறம் நான் பேசறேன்" என்றான் உறுதியாக.

நீதிபதி ரத்னாவை ஆஜராக்கச் சொல்லித் தேதி குறித்து வழக்கை ஒத்தி வைத்தார்.

# 9



"ரத்னா எங்கே இப்போ?" என்று கேட்டார் ஆனந்தராஜ்.

"தோட்டத்துல உட்கார்ந்திருக்கா" என்றாள் சுகுணா. "என்ன ஆச்சுன்னே தெரியலை. அன்னைக்கு இருந்தே சரிபோப் பேச மாட்டேங்கறா. ஒண்ணுமே புரியலை"

சுந்தரம் ஆனந்த ராஜைக் கவலையுடன் பார்த்தான்.

"நாளை ரத்னாவை கோர்ட்டில் ஆஜராக்கச் சொல்லியிருக்காங்க, தெரியுமில்லையா?"

ஆனந்தராஜ் நெற்றி சுருக்கி யோசித்தார். ஜன்னல் வழியே திரும்பிப் பார்க்க, சற்றுத் தள்ளி தோட்டத்தின் குத்துக்கல் ஒன்றின் மீது கன்னத்தில் கை வைத்தபடி உட்கார்ந்திருந்த ரத்னா தெரிந்தாள்.

"ரத்னா எப்படி? சொல்லிக் கொடுக்கறதை அழகா கோர்ட்ல சொல்லுவாளில்லையா? நடிகைங்கறதுனால நல்ல பிராக்டிஸ் இருக்கும் இல்லையா?"

"அதெல்லாம் அசத்திடுவா. பத்து பக்க வசனம் என்றாலும் ஒப்பிச்சிடுவா. ஆனா.."

"ஆனாவாவது ஆவன்னாவாவது. சொல்லணும். சரவணன் அப்பப்போ என்கிட்ட தப்பா நடந்துக்க முயற்சி பண்ணான்னு சொல்லணும். அகமதாபாத்ல நிறையப் பேரிடம் அவளைக் காட்டி ஏதோ புரியாத மொழில பேசினான்னு சொல்லணும். வக்கீல் சொல்லிக் கொடுப்பதை எல்லாம் சொல்லணும். இவள் பேசுறதுல சரவணன் வாயடைக்கணும். புரியுதா?" என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு வேகமாக வெளியேறினார்.

அவர் குரலில் இருந்த மிரட்டல் தொனி சுந்தரத்தையும் சுகுணாவையும் மிரள வைத்தது. கோர்ட்டில் ரத்னா வேறு விதமாகப் பேசி எசகுபிசகாக ஆனால் ஆனந்தராஜ் தம்மை என்ன செய்வாரோ என்கிற நடுக்கம் வந்தது.

"இப்போ என்னங்க பண்றது?"

"என்ன பண்றதா? ஏதாவது சொல்லி ரத்னாவைச் சரி பண்ணு"

"சொல்லிப் பார்த்திட்டேங்க. எத்தனையோ சொல்லிட்டேன். அவள் மந்திரம் போட்டது மாதிரி சரவணன் அங்கிள் நல்லவர்னே சொல்லிட்டிருக்கா"

சுந்தரம் எரிச்சலாகி எழுந்து போனான்.

ரத்னா தனியாக உட்கார்ந்திருந்தாள். எல்லாமே கனவு போல் இருந்தது. வேக வேகமான நிகழ்ச்சிகளால் ஓடிக் கொண்டிருந்த கனவின் போது திடீரென்று யாரோ எழுப்பி உட்கார வைத்து விட்டது போல் எல்லாமே கலங்கலாக இருந்தன.

இப்போது, தான் பள்ளிக்கூட வாசலில் நின்றிருந்தாற்போல் இருந்தது.



### வாசனையே வா!

அறை முழுக்க வாசனையாக இருக்க என்ன செய்யலாம்?

சந்தனமாலைகளை (யாராவது பாராட்டு விழாவில் கழுத்தில் மாட்டியிருப்பாங்களே!) தண்ணீரில் நனைத்துமாட்டி வையுங்கள். 'கும்' மென்று வீரப்பன் வாசனையுடன் இருக்கும். அதே மாதிரி ஊதுபத்திகளையும் நீரில் நனைத்து ஏற்றி வையுங்கள்...ம்... என்ன வாசனை?

-கோபு.

### புளிப்பே போ!

எல்லோருடைய வீட்டிலும் நடக்கும் நிகழ்ச்சிதான் இது. தயிர் புளிப்பது!

தயிர் புளித்துவிடுமோ என்ற நிலை வரும்போது, அதில் ஒரு துண்டு தேங்காயைப் போட்டு வைத்துவிடுங்கள். புளிப்பு கிட்டே வராது!

-அனுபவம்: பாமா

சரவணன் வந்து கூட்டிப் போனது உடைமாற்றி கொஞ்சம் உருவமும் மாற்றி ரயில்வே ஸ்டேஷன் போனது, ரயில் பிரயாணம், புரியாத பாஷை பேசி நடமாடிய மக்களிடையே இது தான் அகமதாபாத் என்று சரவணன் சொன்னது, டாக்ஸி பிடித்து சாமான் ஏற்றி ஓட்டல் ஒன்றில் ரூம் எடுத்தது எல்லாமே இப்போது நடந்த மாதிரி இருக்கிறது.

எப்போது போலீஸ் வந்தது? சரவணன் அங்கிள் பாவம். எங்கே இருப்பார் இப்போது? ஜெயிலுக்குக் கூட்டிப் போனாங்களா, ஊரை விட்டு அனுப்சிட்டாங்களா, இனிமே அவரைப் பார்க்க முடியுமா முடியாதா?

எண்ணங்கள் முட்டி மோதி அலைக்கழித்தன.

ஆனால், வீட்டில் சொல்லாமல் போனதற்காக அம்மாவும் அப்பாவும் நன்றாகத் திட்டுவார்கள் அடிப்பார்கள் என்று பயந்ததற்கு மாறாக, இருவரும் அன்பாய் இருந்தனர். என் செல்லமே என்று அம்மா கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டாள். அம்மா எவ்வளவு நல்லவள்! எவ்வளவு அழுதாள்! இவளிடம் சொல்லாமல் போனது தப்புதான். அதற்குக் கூடத் திட்டலியே

'என்னை விட்டுட்டு அந்த அயோக்கியனோட போக எப்படிம்மா மனசு வந்தது?'

'சரவணன் அங்கிள் நல்லவர்ம்மா. அயோக்கியன் இல்லை!

'ஐயோ! என் மகள் மனசை நல்லா கலைத்து வச்சிருக்கானே'

சரவணன் அங்கிளைப் பற்றிச் சொல்லி அம்மாவுக்குப் புரிய வைக்க முடியவில்லை.

'ரத்னா! இனிமே உனக்கு சினிமா, நடிப்பு, ஷூட்டிங்னு ஒரு பிரச்னையும் இருக்காது. நீ நல்லா படிக்கணும். நிறைய படிச்சு ஒரு பெரிய்ய டாக்டரா ஆகணும், சரியா?'

'நிச்சயமா அங்கிள்'

'இனிமே என்னை அங்கிள்னு கூப்பிடாதே ரத்னா'

'அப்புறம் எப்படி கூப்பிடறது?'

'அப்பான்னு கூப்பிடு. நீ இனிமே என் பொண்ணு நான் உனக்கு அப்பா'

# 10



ரிமான்ட் கைதியாக இருந்த சரவணன் இரண்டு நாட்களாக ஒருவித பதற்றத்தில் இருந்தான். யாருடனும் வெளியில் ஏதும் பேசவில்லை என்றாலும் மனதுக்குள் பேசிப் பேசிப் பார்த்துக் கொண்டிருந்தான். ரத்னா கோர்ட்டுக்கு வரும் நாளில் உண்மைகளைப் போட்டு உடைப்பாள். பொய் வழக்கு போட்டுள்ள


அனைவரின் மூக்கும் உடைபடும். அதன்பிறகு நான் பேசவேண்டும்.

நீதிபதி அனுமதி தருவாரா என்று தெரியவில்லை. எப்படியாவது அனுமதி பெற்றுப் பேசவேண்டும்.

"நீதிபதி சார். இதனை உங்க கிட்ட தான் சொல்றேன். போலீஸ்ல சொல்லலை. சொல்ல பயமா இருந்தது. அவங்க ஒப்புக் கொள்ளத் தயாரில்லைன்னு தெரியும். எனக்கு சட்டம் கோர்ட்டு முறைகளெல்லாம் தெரியாது. அவங்க நீட்டின இடத்தில் கையெழுத்துப் போட்டேன். நான் சாதாரணமானவன். ஆசிரமத்துல வளர்ந்து படிச்சு வேலைக்குப் போனேன். அவ்வளவு தான். அம்மா அப்பா எல்லாம் கிடையாது. என் மேல அன்பு காட்டினவங்க கிடையாது. ரத்னா அன்பு காட்டினா. அவளும் என்னைப் போலத்தான். அவள் மேலயும் அன்பு காட்டினவங்க கிடையாது. அம்மா அப்பா இருந்தும் இல்லாத மாதிரி. அதனாலேயே எங்களுக்குள் ஈர்ப்பு.

எனக்கு ஒரு விஷயம் உறுத்தலாக ஆனதுக்கு அவள் தான் காரணம். இந்தக் குழந்தைகள் எல்லாமே மேஜர் ஆகற வரைக்கும் பேரன்ட்ஸோட அடிமைகள் மாதிரி தானா? குழந்தைகளுக்குன்னு சுதந்தரமான உணர்வுகள் ஆசைகள் இதெல்லாம் இருக்கக் கூடாதா? பெற்றோர்கள் கிழிக்கிற கோட்டுக்குள்ளே தான் வாழ்ந்தாகணுமா? இது புரியலை எனக்கு.

கலீல் ஜிப்ரான் கூடச் சொல்லியிருக்கார். குழந்தைகள் பெற்றோர் வழியாக இந்த உலகத்துக்கு வந்தவங்களே தவிர அவர்களால் உருவான



**பேய் பங்களா!**

சேலத்துக்குப் பக்கத்தில் சூரமங்கலம் என்ற ஓர் இடம். அங்கே ஒரு பங்களா இருந்தது. ஊரில் அதைப்பற்றி பலர் பலவிதமாகப் பேசினர். இரவில் பேய் நடமாடும் பங்களா என்று பலமான பேச்சு.

யாருமே பங்களாவுக்குப் போய் வசிக்கப் பயப்பட்டார்கள். காலியாகவே கிடந்தது அந்த பங்களா.

அந்த பங்களாவில் தைரியமாக ஒருவர், தன் குடும்பத்தினருடன் போய் குடியிருந்தார். ஊரார் பயப்பட்டனர்.

ஆனால் அந்த மனிதர் கொஞ்சம் கூட பயப்படவில்லை.

பிரபல அறிஞர் அவர்.

யார்?

ராஜாஜிதான்!

-எஸ்.ஜி.

வங்க கிடையாது. என்று. யார் கேட்கிறார்கள்? குழந்தைகள் பாதுகாப்பு கருதி பெற்றோருடன் இருப்பதை பெற்றோர் மிஸ்யூஸ் பண்றதில்லையா? குழந்தைகளின் விருப்பத்தை மீறி எதுவும் செய்வதற்கு பெற்றோர் என்கிற பிரிவிலேஜ் மட்டும் போதுமானதா இருக்கே.

சுருக்கமா சொன்னா அனாதையா இருந்த எனக்குக் கூட சுதந்திரம் இருந்தது. நான் ஆசைப்பட்டதைப் படிக்க முடிஞ்சது. எதனையும் செய்யச் சொல்லி எங்க ஆசிரமத்தில் என்னை ஃபோர்ஸ் பண்ணியது இல்லை, ஒழுக்கக் கட்டுப்பாடுகளைத் தவிர. ஆனா, பெற்றோரிடம் வளர்கிற குழந்தைகள் ஏன் அடிமை மாதிரி ஆகணும்.

உதாரணமா சினிமால நடிக்கறதுக்குக் குழந்தைகளைப் பெற்றோர் விடறது தப்புனு சட்டத்துக்கு ஏன் தெரியலை. வாயில்லா ஜீவன் தானே குழந்தையும்? அது வளர்ந்து பெரியதாகி படித்து என்னவெல்லாமோ ஆவதற்கு இருக்கலாம். ஒரு வயசு இரண்டு வயசுலயே சினிமாவில் விட்டு காசு பண்றாங்களே! கைக் குழந்தைகளைத் தூக்கிப் போட அனுமதித்து விடுகிறார்களே! தப்பு இல்லையா? குரங்கை ரோட்டில் வைத்து வித்தை காட்டிப் பிழைப்பவனுக்கும் சினிமாவில் குழந்தையை நடிக்க விடும் பெற்றோருக்கும் என்ன வித்தியாசம்? அதே குழந்தை வளர்ந்து பெரிதாகி சினிமாவில் ஆசைப்பட்டு சேர்வது வேறு விஷயம். ஆனா, விவரம் தெரியாத குழந்தைப் பருவத்தில் மிட்டாய் கொடுத்தோ மிரட்டியோ படிக்கவிடாமல் கெடுத்து... இதெல்லம் தப்பில்லையா? சட்டப்படி தப்பா தெரியவில்லை. ஆனால் மனிதாபிமானப்படி பெரிய தப்பு.

ரத்னாவையே எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு டைரக்டர் திரை உலகின் கவனத்தைத் தன்பக்கம் திருப்புவதற்காக படத்தில் பெண்ணின் வெற்று மார்பினைத் திரையில் காட்டச் செய்த சூழ்ச்சி, குழந்தை பால் குடிப்பது மாதிரி ஒரு காட்சி. சென்ஸார் கத்திரிக்கு அந்த சீன், தாய்மை வெளிப்பாடு என்கிற பூச்சோடு தப்பி வெளிவந்து பயங்கர ஓட்டம். ரத்னாவுடைய பெற்றோர், அவளுடைய நான்காவது மாதத்தில் அப்படி ஒரு காட்சியில் நடிக்க அனுமதித்தது தான் அவளுடைய திரையுலகப் பிரவேசம். அப்புறம் நிறையப் படங்கள். நகைச்சுவை என்ற பெயரில் நிர்வாணமாக, மட்டமான ரசனையுடைய ஆடைகளுடன் குழந்தைப்பருவத்திலேயே காட்சிகள். மூன்று வயதில் வயதுக்கு முதிர்ந்த வசனங்கள். இவளுடைய முன்னிலையிலேயே கதாநாயக நாயகியரின் சரசங்கள் என்று எத்தனை படங்கள். இவளுடைய பெற்றோருக்கு படிப்பு பற்றி என்ன அக்கறை இருக்க முடியும்?

துரதிருஷ்டவசமாக ரத்னாவுக்கு படிக்க ரொம்ப ஆசை. ஸ்கூலில் முதல் ராங்க். அவளைப் பாராட்ட யாரும் கிடையாது. படிக்க ஆசைப்பட்டு உட்காரும் போதெல்லாம் டான்ஸ் கிளாஸுக்கு விரட்டப் பட்டிருக்கிறாள் முதல் ராங்க் எடுக்கும் வெறியோடு ஸ்கூலுக்குக் கிளம்பும் போதெல்லாம் தடுக்கப்பட்டு படப்பிடிப்புக்குக் கூட்டி போகப் பட்டிருக்கிறாள். இத்தனையும் மீறி அவள்

படித்திருக்கிறாள் என்பது ஆச்சர்யமான விஷயம்.

இவள் முதல் ராங்க் எடுத்ததிலும் கஷ்டங்கள் இருந்தன. நடிகை என்பதால் முதல் மார்க் போடுவதாக மற்ற மாணவர்கள் வயிறெரிந்து ஒதுக்கி வைக்காத குறை. ஓரிருவர் தவிர பள்ளியில் நண்பர்கள் கிடையாது. சில விடலை மாணவர்கள் படுத்திய பாடு. வீட்டில் சொன்னால் இதற்காகவே காத்திருந்தது போல் நாளையில் இருந்து ஸ்கூல் போகவேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள்.

இப்படிப்பட்ட நாட்களில் தான் நாங்கள் நண்பர்கள் ஆனோம். அவளுடைய படிப்பு ஆர்வத்துக்கு நான் தூண்டுகோலாக இருந்தேன். அவளுடைய மற்ற திறமைகள் குறிப்பாக ஓவியத்திறமை வளர உதவி புரிந்தேன். இந்த ஸ்டேஜில் கொஞ்சம் வளர்ந்து இருந்ததால் சினிமா தொல்லைகள் நீங்கி இருந்தாள். ஆனால், அவள் வயதுக்கு வருவதற்காக அவளுடைய பேரன்ட்ஸ் காத்திருக்கிறார்கள் என்று தெரிந்த போது இருவருமே அதிர்ந்து போனோம். அவள் சீக்கிரம் வயதுக்கு வருவதற்காக அவர்கள் செய்தவைகளைச் சொன்னால் உங்கள் நெஞ்சம் கண்ணீர் விடும். பாவிகள்! பெற்றோர்களா அவர்கள்? இவர்களிடம் இருப்பதற்கு பதில் ரத்னா அநாதையாகவே இருக்கலாம்.

குடிகார அப்பாவும் மேனிமினுக்கி அம்மாவும் ரத்னா பெரியவளானதும் என்ன செய்தும்-இந்த வார்த்தைகளை விவரிக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்-என்ன செய்தும் அவளை சினிமாவில் மீண்டும் நுழைத்து விடத் தயார் என்று அறிந்து பலமுறை என்னிடம் அழுதிருக்கிறாள். அவளுடைய எதிர்காலம் அவள் ஆசைப்பட்ட படிப்பு வழிகளில் அமைய வேண்டுமானால் ஒரே வழி, அவளை எங்காவது கண்காணாத இடத்துக்குக் கூட்டி போய் வளர்த்து ஆளாக்குவது என்று முடிவு செய்து அவளுடைய ஒப்புதலைக் கேட்டேன். தமிழ் நாட்டுக்கு வெளியே அமைதியான ஒரே மாநிலம் குஜராத்தான். காந்தி பிறந்த மண். என்னுடைய ஆசிரம நண்பர் ஓரிருவர் அங்கே இருக்கிறார்கள். எனவே அங்கே போக முடிவு செய்தோம்.

துரதிருஷ்டவசமாக நாங்கள் போய்ச் சேர்ந்த போது நான் எதிர்பார்த்துப் போன நண்பர் விடுமுறையில் சென்றிருப்பது தெரிய வந்தது. ஓட்டலில் ரூம் எடுத்துத் தங்கினோம். போலீஸ் தரப்பில் சொல்லப் பட்டவைகளைக் கனவிலும் நினைத்ததில்லை நான்.

உண்மையில் இரண்டு நாட்கள் ரத்னாவுக்கு ஊர் சுற்றிக் காண்பித்து விட்டு மூன்றாம் நாள் ஒரு வக்கீலைத் தான் கான்டாக்ட் செய்தேன். ரத்னாவை என் மகளாக வரித்துக் கொள்வது சட்டப்படி சாத்தியமா என்று அறிவதற்காகவும், சர்டிபிகேட்கள் எதுவும் இல்லாத நிலையில், அவளுடைய படிப்பு தொடர்வது சம்பந்தமாகவும் விவரம் விசாரிப்பதற்காக. அப்போது நான் சொன்ன வற்றில் சில விஷயங்கள் முரணாக இருப்பதாகச் சந்தேகப்பட்டு அவர் போலீஸுக்குத் தகவல் கொடுத்து விட்டார். அப்படித் தான் நான் பிடிபட்டேன்.

நான் கூறியவைகளில் எந்த சந்தேகம் என்றாலும் ரத்னாவிடம் நீங்கள்

குறுக்கு விசாரணை செய்து கொள்ளுங்கள். என் மன பாரங்களை இறக்கி வைக்க சந்தர்ப்பம் அளித்ததற்கு மிக்க நன்றி நீதிபதி சார்..."

மனத்தளவில் ஒத்திகை பார்த்துப் பார்த்து திருப்தி பட்டுக் கொண்டான் சரவணன்.

தங்கு தடையின்றி ஒப்பிக்க வேண்டும்.

குழந்தைகள் நடிப்பது பற்றிப் பரிசீலனை செய்யும் அறிவு, சமூகத்துக்கு வரவேண்டும். தீப்பெட்டி ஒட்டினால் பீடி சுற்றினால் சில்லறையாய்ச் சம்பாதித்தால் தான் குழந்தைத் தொழிலாளியா? அதற்கு மட்டும் தான் எதிர்ப்பா? சினிமாவில் ஆயிரம் ஆயிரமாய் சம்பாதித்தால் அதற்கு என்ன பெயராம்?

# 11



பகலில் கொஞ்சம் தூங்கி விழித்தாள் ரத்னா.

அப்பாவும் அம்மாவும் மாறி மாறி சொன்ன விஷயங்கள் உள்ளுக்குள் குழப்பின. ரத்னாவை ஒரு படம் புக் பண்ணும் விஷயமாகபோன் ஒன்று வந்தபோது அப்பா "இனிமேல் ரத்னா நடிக்கப் போவதில்லை. படிக்கப் போகிறாள். சாரி சார். நீங்க எத்தனை லட்சம் தந்தாலும் சரி. வேண்டாம் என்று போனை வைத்து விட்டு அவளை அருகே அழைத்து தலையை ஆதரவாகத் தடவிக் கொடுத்தபடி சொன்னது நினைவு வந்தது.

"ரத்னா! உனக்கு நடிக்கப் பிடிக்கலைன்னா இனிமே நடிக்கவே வேண்டாம். என்ன படிக்கணுமோ படி. டான்ஸ் கிளாஸ் எதுவும் வேண்டாம். சரியா?"

"ஆமாம் ரத்னா! உன் விருப்பப்படி நடக்கிறோம். எங்களை விட்டுட்டுப் போயிடாதே. நாங்க செத்தே போயிடுவோம்..." என்று அம்மா அழுதாள்.

சுந்தரம் கடிகாரத்தையும் வாசலையும் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அம்மா கொடுத்த காபியைக் குடித்துக் கொண்டிருந்த போது அவர்கள் வந்தார்கள்.

"யார் வேணும்?"

"மாடி போர்ஷனில் மிஸ்டர் சரவணன்னு ஒருத்தர் இருக்காரா? அவரைப் பார்க்கணும். போர்ஷன் பூட்டியிருக்கு என்று சொன்னவனுக்கு வயது முப்பது இருக்கலாம். லேசான வடக்கத்தி வாடையுடன் தமிழ் பேசினான். நல்ல உயரமாக

இருந்தான். கூட வந்தவன் ரத்னாவையே வெறித்துக் கொண்டிருக்க ரத்னா லேசான பயத்துடன் எழுந்து உள் அறைக்குச் சென்று விட்டாள். இருந்தும் ஹாலில் அவர்கள் பேசியது காதில் தெளிவாக விழுந்தது.

"நீங்க யாரு?"

"நாங்க பாம்பேல இருந்து வர்றோம். ஒரு பிஸினஸ் விஷயமா காண்டாக்ட் பண்ணணும்"

"என்ன பிஸினஸ்?" என்றபடியே அங்கே வந்தான் சுந்தரம். சுகுணா கொஞ்சம் ஒதுங்கி நின்றாள்.

"எங்க சேட்டுக்குத் தன் பதினொரு வயசுப் பொண்ணை தத்து எடுக்கத் தர்றேன்னு சொல்லி சரவணன் ஒரு லட்ச ரூபா அட்வான்ஸும் வாங்கியிருக்கார். ஆனா இன்னிக்கு வரைக்கும் எந்தத் தகவலும் இல்லை. அந்தப் பெண்ணை அரேபியால விக்கிறதுக்கு சேட் எல்லா அரேஞ்ஜ்மென்ட்டும் பண்ணிட்டாராம். சரவணன் பற்றி ஒரு தகவலும் இல்லை. சேட் கோபத்தில் இருக்கிறார். அதான் பார்த்திட்டு வரச் சொன்னார்.

"என்னச் சொல்றீங்க. ஒண்ணும் புரியலை"

"இப்போ ஒருபொண்ணு உள்ளே போச்சே. அது யாரு?"

"என் பொண்ணு தான் ஏன்?"

"டேனி! ஒண்ணு கவனிச்சியா? சரவணன் தன் மகள்னு சேட்டுக்குக் கொடுத்த போட்டோல இதே பொண்ணுதானே இருந்தது?"

"ராஸ்கல்ஸ்" என்று கொதித்தான் சுந்தரம். "என்னடா விளையாடறீங்க. அது எம் பொண்ணுடா. மரியாதையா வெளியே போறீங்களா, போலீஸைக் கூப்பிடவா" என்று அலறினான். "சுகுணா! போலீஸுக்கு போன் பண்ணு" என்று கட்டளையிட்டான்.

வந்தவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"சரிசார். எங்கேயோ எதோ தப்பாயிடுச்சுன்னு நினைக்கிறோம்" என்று நகர்ந்தார்கள்.

"என்னடா தப்பாயிடுச்சு? வெளியே போங்கடா நாய்களா? என்ன பிஸினஸ்டா பண்றீங்க? கண்ட நாயும் மாடி போர்ஷன்ல குடி வந்த வினை. ரத்னா என் பொண்ணுடா. அதுக்கு எதாவதுன்னா என் உயிர் போனாத்தான் நடக்கும். என்னடா நினைச்சிட்டிருக்கீங்க? என்று உச்சஸ்தாயியில் கத்த உடம்பு விண் விண் என்று சுண்டிவிடப்பட்ட இசைக்கவை போல் துடித்துக் கொண்டிருந்தது.

"என்னங்க? என்ன ஆச்சு?" என்று அவனை ஆசுவாசப் படுத்த அருகில் நெருங்கிய சுகுணாவைப் பார்த்து ரகசியமாய்ப் புன்னகைத்தான். மெல்லிய குரலில் "ரத்னா எங்கே?" என்று கேட்டான்.

சுகுணா நமுட்டுச் சிரிப்புடன் உள் அறையைக் காட்ட அங்கே போனான். ரத்னாவை அணைத்துக் கொண்டான். குரல் மல்க, "இப்போ தெரியுதாம்மா சரவணன் ஏன் உன்னிடம் அப்பான்னு அவனைக் கூப்பிடச் சொன்னான்னு? நீ என் மகள்மா. உன்னை யாரிடமும், விடமாட்டேன்" என்றான்.

ரத்னாவின் கண்களில் நீர் முட்டியிருந்தது.

உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. லேசான ஜுரம் போல் கூட்டது. அப்படியே சுந்தரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"ஐ லவ் யூ டாடி" என்றாள் குரல் நடுங்கி "நீங்க என்ன சொல்றீங்களோ செய்யறேன் டாடி" என்றாள்.

"வக்கீலை வரச் சொல்லு சுகுணா"

# 12



ரத்னாவின் வாக்கு மூலம் கேட்டபிறகு அடைப்பட்டுப் போன சரவணனின் வாய் தண்டனைக் காலத்தில் கூட மீண்டும் திறக்கவே இல்லை.

சில ஆண்டுகளுக்குப் பிறகு சிறையில் கண்ணில் பட்ட தினசரி பேப்பரில் வெள்ளித்திரை பகுதியைப் பார்க்க நேர்ந்தது.

தொப்புள் தெரிய மேல் சேலை விலக கவர்ச்சியாக ரத்னா சிரித்துக் கொண்டிருக்க அருகில் பாலகணபதி ஜொள் ஒழுக பார்த்துக் கொண்டிருப்பது போன்ற போட்டோ பிரசுரமாகியிருந்தது. 'நாயரின் பெயரிடப் படாத திரைப்படம் ஒன்றில் குமாரி ரத்னா தோன்றும் காட்சி' என்று எழுதப் பட்டிருந்ததை வாசித்தான்.

மனதினுள் அழுதான்.

## முற்றும்

---

அச்சிட்டவர் : கே. சந்தானகிருஷ்ணன். பதிப்பாளர் : பி.வி. பார்த்தசாரதி. குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட் சார்பாக குமுதம் பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்டில் அச்சிடப்பட்டு 151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் வெளியிடப்படுகிறது. **ஆசிரியர்: பி.வி. பார்த்தசாரதி.**

கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.